[illegible]

NO. 9 2 [illegible]. 1933

3L

[illegible] 211, N28KN

N33.6.9

189142

KALANILAYAM   தனிப்பிரதி விலை அணு மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 6.]   1933 ௵ மார்ச் ௴ 2௳   [No. 9

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 161
2. தமிழ்ப் பாடம் (நளவெண்பா - கலிநீங்கு காண்டம்) 163
3. அப்பர் (64 கலை-வியாகரணம்-குற்றியலுகரம்) E. N. தணிகாசல முதலியார் B A.B.L. 165
4. தேவகி (ஓர் நாவல்) K. இராஜகோபாலன் 166
5. நம்மாழ்வார் வைபவம் (4-ம் பத்து, 7-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 168
6. காற்றுமழை (அங்கம் 1. களம் 2.) Shakespeare's - Tempest 169
7. வீரசுத்தி விநாயகர் திருவூஞ்சல் நவாலி க. சோமசுந்தரம் பிள்ளை 171
8. கலித்தொகை (பாலைக்கலி 6.) T. A. கனகசபாபதி முதலியார் 172
9. பொதிகை நிகண்டு (ககர வருக்கம்) S. வையாபுரிப்பிள்ளை B.A., B.L., 173
10. யாப்பிலக்கணம் (செய்யுள்—வெண்பா) வித்துவான் M. V. வேணுகோபாலப்பிள்ளை 174
11. கம்பராமாயணம் (மாரீசன் வதைப்படலம்) T. N. சேஷாசலமையர் B.A.,B.L. 175
12. வர்த்தமானம் 179

கலாநிலயம்

சொன்னல் விரோதம் 8.

நளாயினியே யல்லளோ நன்மனைவியென்று ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் எடுத்துக் காட்டிக் கொண்டாடினர். முன்னர் நாம் விளக்கியவாறு, மனைவியென்னும் உறவில் நளாயினி தலைநின்ற நீர்மை, மாநுடவுறவுகள் அனையவைகளின் பெருமையையுஞ் சார்ந்ததாகும். மன்னவன் குடிகள், எசமானன் வேலையாள், தந்தை மைந்தன், கொள்வோன் கொடுப்போன், ஆசான் மாணவன், இவையனைய உறவுகள்யாவற்றிலும், ஒரு திறத்தவன் தனக்குரிய கடமையைச் செவ்விதின் ஆற்றும் வகையில் தன்னையே துறந்துகொள்ளவேண்டிய தூய்மையானது, மறுதிறத்தவன் அக் கடமையைப் பெற்றுக்கொள்வதற்கு, குணம் ஒழுக்கம் முதலியவைகளால் எத்துணைத் தகுதியுடையவனு யிருக்கின்றான்என்பதை ஒருபோதுஞ் சார்ந்திருப்பதன்று. "உன் முறைமையை நீ செலுத்திவிடு. அதனைப் பெற்றுக்கொள்ள நிற்பவன், உன்பால் அதற் கெதிராகத் தான் புரியவேண்டிய கடமையைப் புரியாதொழியும் புல்லனுவானுயின் ஆகுக. அதனல், என்! அவன் உனக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யாமையாற்றனே, அன்னவனைப் புல்லன் என அழைக்கின்றாய். மற்று, அவன் அவ்வாறு புல்லனுய காரணமே காரணமாக, நீயும் உன் கடமையை அவனுக்குச் செய்யாமல் உன்னைப் புல்லனுக்கிக்கொள்ளல் அழகாமோ! அவன், உன் கடமைக்கு எதிர்க்கடமை செலுத்தானுயின், இக் கணக்கினை நேர்செய்யக் கடவுள் ஒருவர் இல்லையோ! ஆகையால் அவனை விட்டுவிட்டுக் கடவுளையே உன் கடன்காரனுக்கிக்கொள்வது, உனக்குச் சாலவும் இலாபமன்றோ"—என்று எமர்ஸன் உரைத்துள உத்தம மொழிகளைக் கேளாச் செவிகள் நீளமே பெரிதுடையன.

இந்தத் தத்துவத்தால் இயக்கப்பெற்ற உத்தமி நளாயினி போல்வார் சிலர், "தங்கள் நாயகரின் தெய்வம் தவம் பிறிதில்லை என்னும் மங்கைமார்," அந்நாயகர் எத்தன்மையராயினும், கடமை கெழும ஒழுகுதற் காதாரமாயிருந்த சிந்தையின் தூய்மையை ஆங்கில இலக்கியங்களினின்று டேய்ன் என்பவர் வியப்புடன் விளக்கிவருகின்ற மொழிகள், இன்று, புல்லுரைகள் கேட்டுத் தூர்ந்திருக்கும் செவிகளைச் செம்மை செய்வதற்கு உதவும் என நினைக்கின்றோம். மேலும் வரைகின்றார் அவர்—

Aspasia forlorn,
" Walks discontented with her watery eyes
Bent on the earth. The unfrequented woods
Are her delights : and when she sees a bank
Stuck full of flowers, she with a sigh will tell
Her servants what a pretty place it were
To bury lovers in ; and make her maids
Pluck them and strew her over like a corse.
She carries with her an infectious grief,
That strikes all her beholders ; she will sing
The mournful'st things that ever ear hath heard,
And sigh and sing again ; and when the rest
Of our young ladies in their wanton blood,
Tell mirthful tales in course, that fill the room
With laughter, she will with so sad a look
Bring forth a story of the silent death
Of some forsaken virgin, which her grief
Will put in such phrase, that, ere she end,
She'll send them weeping one by one away."

Like a spectre about a tomb, she wanders forever about the remains of her destroyed love, languishes, grows pale, swoons, ends by causing herself to be killed. Sadder still are those, who, from duty, or submission allow themselves to be married while their heart belongs to another. They are not resigned, do not recover like Pauline in "*Polyeucte.*" They are crushed to death. Penthea, in Ford's "Broken Heart" is as upright but not so strong, as Pauline; she is the English wife, not the Roman, stoical and calm. She despairs sweetly, silently and pines to death. In her innermost heart she holds herself married to him to whom she has pledged her soul. It is the marriage of the heart which in her eyes is alone genuine, the other is only *disguised adultery*. In marrying Bassanes she has sinned against Orgilus; moral infidelity is worse than legal infidelity, and thenceforth she is fallen in her own eyes. She says to her brother :—

"Pray, kill me
Kill me pray ; nay will ye ?"

Ithocles

"How does they lord esteem thee ?"

Panthea

"Such an one.
As only you have made me ; a faith-breaker
A spotted whore ; forgive me, I am one—
In act, not in desires, the gods must witness
For she's that wife to Orgilus, and lives
In adultery with Bassanes,
Is at the best a whore. Wilt kill me now ?
The handmaid to the wages
Of country toil, drinks the untroubled streams
With leaping kids ; and with bleating lambs,
And so allays her thirst secure ; whiles I
Quench my hot sighs with bleeding of my tears."

With tragic greatness, from the height of her incurable grief she throws her gaze on life.

"My glass of life, sweet princess, hath few minutes
Remaining to run down ; the sands are spent ;
For by an inward messenger I feel
The summons of departure short certain...Glories
Of human greatness are but pleasing dreams,
And shadows soon decaying ; on the stage
Of my mortality, my youth hath acted
Some scenes of vanity, draws out at length.
By varied pleasures, sweeten'd in the mixture,
But tragical in issue . . . . That remedy
Must be winding-sheet, a fold of lead,
And some untrodden corner in the earth."

There is no revolt, no bitterness ; she affectionatly assists her brother who has caused her unhappiness and tries to enable him to win the woman he loves ; feminine kindness and sweetness overflow in her in the depths of her despair. Love here is not despotic, passionate as in southern climes. It is only deep and sad ; the source of life is dried up, that is all; she lives no longer ; because she cannot ; all go by degrees—health, reason, soul ; in the end she becomes mad, and behold her dishevelled, with wide staring eyes, with words that can hardly find utterance. For ten days she has not slept, and will not eat any more ; and the same fatal thought continually afflicts her heart, amidst vague dreams of maternal tenderness and happiness brought to nought, which come and go in her mind like phantoms ;—

"Sure if we were all sirens, we would sing pitifully
And 'twere a comely music, when in parts
One sung another's knell ; the turtle sighs
When he has lost his mate, and yet some say
He must be dead first : 'tis a fine deceit
To pass away in a dream ! Indeed I have slept,
With mine eyes open, a great while. No falsehood
Equals a broken faith ; there's not a hair
Stick on my head, but like a leaden plummet
It sinks me to the grave : I must creep thither :
The journey is not long.
Since I was first a wife, I might have been
Mother to many pretty prattling babes ;
They would have smiled when I smiled ; and for certain
I should have cried when they cried—truly brother,
My father would have pick'd me out a husband
And then my little ones had been no bastards ;
But it is too late for me to marry now,
I'm past child-bearing ; 'tis not my fault . . . . spare your hands ;
Believe me I'll not hurt it............
Complain not though I wring it hard : I'll kiss it
Oh it is a fine soft palm !—hark, in thine ear ;
Like whom do I look, prithee ?—Nay no whispering
Goodness ! we had been happy ; too much happiness
Will make folk proud, they say.... ......
There is no peace left for a ravished wife
Widowed by lawless marriage ; to all memory
Panthea's, poor Panthea's name is strumpeted......
Forgive me ; Oh ! I faint..."

She dies imploring that some gentle voice may sing her a plaintive air, a farewell ditty, a sweet funeral song. I know nothing in the drama more pure and touching.

இரக்கமுந் தூய்மையும் இதனினும் அதிகம் வாய்ந்தது எங்குளதென டேய்ன் என்னும் இந் நூல்நயமுணரும் பெரியார், பான்தியாவின் சரிதத்தை வியக்கின்றார். ஏனையோரும் அவரளவு இதனை வியப்பார்களென்பதில் ஐயமில்லை. எனினும், வியந்துரைப்பதொன்றும் நயந்து செய்வது வேறுமாய் முரண்பட நடத்தும் வாழ்க்கையின் இழிவைப் பழிப்பதற்குப் போதிய சொற்கள் எம் மொழியிலும் இல்லாமையே குறை.

சிந்தனை உயர்ந்துசெல்லும் சீரியோர், மேற்கோள்களாக எடுத்தாளப்பெற்ற அந் நாடகநூ லாசிரியர். அவைகளை எடுத்தாளும் டேய்ன், கலைபொதிந்த மனத்தின் தூய்மை வாய்ந்தவராதலின் அதன் அருமையை அறிந்து பாராட்டுகின்றனர். நம் காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரிய ஸ்வாமிகள் அறிவொடு துறவும் வாய்ந்த தூய்மையோராதலின், நளாயினி அனையவர் தெய்வத்தன்மையை ஆராதித்தற்குரிய விக்கிரகமாக நம்மனோர் உள்ளத்தில் நிறுவுமோர் நீர்மையராகின்றனர். எனின், இன்னவர்தம் பொன்னுரைகளை இதயத்தின்மீது பொறித்துக்கொள்ளாமல், உன்னுதற்கும் பன்னுதற்கு முதவாத சில கொள்கைகளைக் கோட்டிகொண்டு புகட்டப் புகுவது, ஏன் நிகழ்கின்றது எவ்வாறு நிகழ்கின்றது, என்றெல்லாம் ஏங்குவார்க்குத் திருவள்ளுவர்,

"சிறியா ருணர்ச்சியு ளில்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னு நோக்கு"

என்னும் அமைதியை எடுத்துக்காட்டி யிருக்கின்றார். இதனைச் சொன்னால் விரோதமாகுமோ என அஞ்சிச் சொல்லாமல் விடுவது துரோகமாகுமே.

தமிழ்ப் பாடம் 59.

நள வெண்பா—கலி நீங்கு காண்டம்

[146-வது பக்கத் தொடர்ச்சி]

வாகுகன் மொழிந்ததுகேட்டு, அவன் உரைக்கும் உருவிற்கும் உள்ள வேறுபாட்டை நினைந்து மிக வியந்தவனுப்சுவேதன் என்னும் அந்தணன் விதர்ப்ப நாடு வந்துசேரத் தமயந்தி மிகுந்த ஆவலோடு உற்றது வினவி, மீண்டும் அவ் வந்தணனை அயோத்திமா நகருக்கு அனுப்பிய செய்தியை இனிவரும் மூன்று செய்யுள்கள் கூறுகின்றன.

———

[கொல்

எங்க ணுறைந்தனைகொ லெத்திசைபோய் நாடினை
கங்கை வளநாட்டார்தங் காவலனை—அங்குத்
தலைப்பட்ட வாறுண்டோ சாற்றென்றாள் கண்ணீர்
அலைப்பட்ட வாகத்தா ளாங்கு. 35.

பதவுரை.

ஆங்கு - அவ்வந்தணன் வந்தபோது,
கண் - கண்களிலிருந்து வரும்
நீர் - நீரானது
அலைப்பட்ட - அலைபடும்படி புரண்டோடிய
ஆகத்தாள் - மார்பையுடைய தமயந்தி,
"எங்கண் - எவ்விடத்தில்
உறைந்தனை - தங்கினாய்,
எ - எந்த
திசை - திக்கில்
போய் - போய்
நாடினை - தேடினாய்,
அங்கு - நீ போன திசையில்,
கங்கை - கங்கையாற்றினது
வளம் - வளப்பம் மிகுந்த
நாட்டார்தம்-நாட்டினர்களாகிய நிடதர்களது
காவலனை - அரசனை (நளனை)
தலைப்பட்டவாறு - சந்தித்தது
உண்டோ - உண்டோ,
சாற்று - சொல்"
என்றாள் - என்று கூறினாள்.

விரிவுரை:—ஆவலுடன் வினவுகின்ற இந்தத் தமயந்தி சொற்களை அடுக்கிப் பொழிகின்றாள். 'நளனை நீ கண்டது உண்டோ' என்று மாத்திரம் கேட்கவேண்டிய அப்பேதை, அமைதியற்று, இவன் தங்கிய இடமும் சென்ற திசையும் பலபட வினவினாளானாலும் அவ்வந்தணன் கூறவேண்டியதை மாத்திரம் மிகவும் சுருக்கமாக நன்கு கூறுகின்றான்.

———

[கால்

வாக்கினான் மன்னவனை யொப்பான் மறித்தொரு
ஆக்கையே நோக்கி னவனல்லன்—பூக்கமழுங்
கூந்தலாய் மற்றக் குலப்பாக னென்றுரைத்தான்
ஏந்துநூன் மார்ப னெடுத்து. 36.

பதப்பிரிவு:—வாக்கினால் மன்னவனை ஒப்பான் மறித்து ஒருகால் ஆக்கையே நோக்கின் அவன் அல்லன் பூ கமழும் கூந்தலாய் மற்று அ குலம் பாகன் என்று உரைத்தான் ஏந்து நூல் மார்பன் எடுத்து.

பதவுரை.

நூல் - பூணூலை
ஏந்து - தாங்கிய
மார்பன் - மார்பையுடைய அவ்வந்தணன்,
"பூ - பூவினது மணம்
கமழும் - கமழ்கின்ற
கூந்தலாய் - கூந்தலையுடையவளே,
அ - அந்த
குலம் - சிறந்த
பாகன் - பாகனானவன்,
வாக்கினால் - பேச்சினால்
மன்னவனை - அரசனை
ஒப்பான் - போன்று இருக்கின்றான் (ஆனால்),
மறித்து - மீண்டும்
ஒருகால் - ஒருதரம்
ஆக்கையே - (அவனது) உடலையே
நோக்கின் - பார்த்தால்
அவன் - அரசன் எனத் தகுந்தவன்
அல்லன் - ஆகமாட்டான்"
என்று - என்று
எடுத்து - எடுத்து
உரைத்தான் - சொன்னான்.

விரிவுரை :—அந்தணன் கூறியவெல்லாம் இச் செய்யுளில் கூறப்பட்டிருக்கவில்லை. முதலில் அவள் விஷயத்தை அறிந்துகொள்ளும்படி சுருக்கமாக இதனைச்சொல்லிப் பிறகு தான் கண்ட வாகுகனது உருவத்தையும் அவன் உரைத்த சொற்களையும் விரிவாகக் கூறியிருத்தல் வேண்டும். 'அக் குலப் பாகன்' என்று சுட்டியது, கூறும்போது இவன் நினைவில் தோன்றிய உருவத்தைக் கருதிக் கூறியதெனக்கொள்ளலாம். "தலைப்பட்டவாறுண்டோ" என்று கேட்ட தமயந்திக்குஇவ்வந்தணன் "தலைப்பட்டேன்என்றும் சொல்வதற்கில்லை; தலைப்படவில்லை என்றும் சொல்வதற்கில்லை; என்னுரைக்கு நேர்நின்று எதிர்மாற்றந் தந்தவன், காவலன் அல்லன், ஓர் பாகனே. அவன் உருவமும் இது, அவன் கூறியதும் இதுவே. இனி உன் நுண்ணறிவிற் கேற்றவாறு உண்மை யாதென ஊகித்துக்கொள்" என்று இயம்புவானாயினான்.

பாகன், என்பதைத் தமிழ்மொழியாகக் கொண்டால் அது தேர்ப்பாகனைக் குறிக்கும்; வடமொழியாயின் சமையல் செய்வோனைக் குறிக்கும். நளன் இவ்விரு தொழிலும் அங்குச் செய்திருந்தானாகையால், இவ்விரு பொருளிலும் அவனைப் 'பாகன்' என்று சொல்வது பொருந்தும்.

உருவம் எதுவாயினும் தொழில் எதுவாயினும் ஒருவனுடைய பெருமையை அறிவதற்கு இடமாயிருப்பது அவன் வாக்கு.நளன் வாகுகனாய்ச்சென்று அயோத்திமன்னனுக்குத் தான்,"மான்தேர்த் தொழிற்கும் மடைத்தொழிற்கும் மிக்கோன்" என்று தெரிவித்துக்கொண்டபோது அம்மன்னன், "இம்மொழிக்குத் தக்கானை இங்கே தருமின்" என்றுமதித்துரைத்ததை முன்னர்க் கண்டோம். அந்தணனும் இங்கு வாக்கினாலேயே அவன் மன்னவன் ஆதல்வேண்டும் என மதிக்கின்றான். ஒளவை பிராட்டியாரும்" துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம் தப்பாமல் சார்வார்தமக்கு" உண்டாகும் நலங்களிலெல்லாம்

வாக்கு உண்டாவதையே முதன்மையாக வைத்திருக்கின்றார்.

மீண்டோர் சுயம்வரத்தை வீமன் றிருமடந்தை
பூண்டாளென் றந்தணநீ போயுரைத்தால்—நீண்ட
கொடைவேந்தற் கித்தூரந் தேர்க்கோலங் கொள்
படைவேந்த னென்றாள் பரிந்து. 37. [வான்

பதப்பிரிவு:—மீண்டும் ஓர் சுயம்வரத்தை வீமன் திருமடந்தை பூண்டாள் என்று அந்தண நீ போய் உரைத்தால் நீண்ட கொடை வேந்தற்கு இ தூரம் தேர் கோலம் கொள்வான் படை வேந்தன் என்றாள் பரிந்து.

பதவுரை.

"அந்தண - அந்தணனே,
வீமன் - வீமராஜனுடைய
திரு - அழகிய
மடந்தை - பெண்
மீண்டு - மறுபடியும்
ஓர் - ஒரு
சுயம்வரத்தை - சுயம்வரத்தை
பூண்டாள் - மேற்கொண்டாள்,
என்று - என்று
நீ - நீ
போய் - (அயோத்தில்) போய்
உரைத்தால் - சொன்னால்
நீண்ட - உயர்ந்த
கொடை - ஈகையையுடைய
வேந்தற்கு - இருதுபர்ண வேந்தனுக்கு,
படை - படைகளையுடைய
வேந்தன் - நளவேந்தன்
இ - இந்த
தூரம் - தூரத்தளவும்
தேர்க்கோலம் - தேரோட்டும் கோலத்தை
கொள்வான் - அடைவான் (அதாவது சாரதியாக வருவான்)" என
பரிந்து - அன்போடு
என்றாள் - (தமயந்தி) சொன்னாள்.

விரிவுரை:—தமயந்தி மிக்க நுண்ணறிவு உடையவள். நளன் சென்றடைந்த இடத்தைத் தேடித் தெரிந்துகொள்ளச் செய்த உபாயம் போலவே, அவனைத் தன்னிடம் வரவழைப்பதற்கும் ஓர் உபாயம் செய்கின்றாள். எனினும் உரைத்த பதிலைக்கொண்டு அக்குலப்பாகனை நளனென்றே நினைக்கலாமாயினும் உருவம் வேறுபட்டிருப்பதால் அவனே நளன் என்று உறுதியாய்க் கொள்வதற்குமில்லை. ஆதலால் அப் பாகனைத் தன்னூர்க்கு வரச்செய்து தானே நேரில் பார்த்தும் பின்னும் சில சோதனைகள் செய்தும் உண்மையைத் தேர்ந்தறிய விரும்பினாள். புத்தி கூர்மை யுள்ளவளாதலால் அதற்குத் தக்க உபாயமும் வெகுவிரைவில் ஊகித்தனள். தனக்குச் சுயம்வரம் என்றால் இருதுபர்ணன் தவறாது வருவான் என்பது அவள் துணிவு. இருதுபர்ணனுக்குச் சாரதியாய் வருவதும் அவ் வாகுகனாகத்தான் அமையவேண்டும் குதிரையின் மனம் அறிந்து மந்திரத்தால் ஓட்டும் சக்தி வாய்ந்தவன் நளன் தான் என்பது அவளுக்குத் தெரியும். அவனையல்லாது வேறு யாரையும் பாகனாய்க் கொள்ள இருதுபர்ணனுக்கு இயலாது. ஏனெனில், அந்த இரண்டாம் சுயம்வரமும் நாளைக்கே நடக்குமென்று அந்தணனை இருதுபர்ணனுக்குச் சொல்லச் சொல்கின்றாள். இது பின்வருகின்ற ஒரு செய்யுளால் தெரியும். நானூறு நாழிகை தூரம் நாளொன்றில் தேர் கடவ வல்லவன் நளன் ஒருவனேயாதலால், அவ் வாகுகன் உண்மையில் நளவேந்தனேயாகில் இருதுபர்ணனும் தன் வாகுகப்பாகனது திறமறிந்து அவனையே தேர்க்கோலங் கொள்வதற்குத் தேர்ந்திடுவன். அப்படி ஒரு நாளில் அப்பாகன் தேரைக் கொணர்ந்து சேர்ப்பானால் அதுவே அவன் நளன் என்பதற்கு ஒரு சாக்ஷியுமாகும். இத்தூரம் ஒரு நொடியில் யோசித்தாள் தமயந்தி. யோசித்து இவ்வுபாயத்தைக் கைக்கொண்டாள்.

வீமன் மடைந்தைக்கு இரண்டாம் சுயம்வரம் என்ற சொல்லை 'இது ஏதோ, வம்பு' என விலக்காமல் நம்பி வரத்தகுந்த பேதை அக்கால அயோத்தி மன்னன் என்பதும் தெரிந்திருக்கவேண்டும். அவன் அவ்வாறு ஓர் முழுப்பேதையும் ஆயினான் என்பதைப் பின்னர்க் காண்கின்றோம்.

இலக்கணம்.

உகரம் மொழிக்கு இறுதியில் வரும்போதுதான் தன் ஒரு மாத்திரையில் குறுகி அரைமாத்திரையாக ஒலிக்க இயலும் என்றுமுன் சொன்னேன். அப்படிக் குறுகி ஒலிக்கும்போது அவ்வுகரத்திற்குக் குற்றியலுகரம் என்று பெயர். மொழிக்கு இறுதியில் வரும்போதுதான் உகரம் குறுகும் என்று சொன்னேனேயொழிய, அவ்வாறு இறுதியில் வரும்போதெல்லாம் குறுகும் என்று சொல்லவில்லை. **வீடு** என்றசொல்லின் இறுதியில் இருப்பது உ என்னும் எழுத்து. அந்த உகரம் ட் என்னும் மெய்யின் மேல் ஏறி அந்த வார்த்தையின் கடைசிச் சப்தமாயிருப்பதை உச்சரித்துப் பாருங்கள்—வீ ட் உ—.ஆகையாற்றான் அதனை ஈற்றுகரம் என்கின்றோம்.

வீடு என்று சொல்லையும் **விடு** என்ற சொல்லையும் உச்சரித்துப்பாருங்கள். அப்படியே, சேறு செறு, போது பொது, பாகு பகு, பாசு பசு, என்பன போன்ற இவ்விரு சொற்களை அடுத்தடுத்து உச்சரித்துப்பாருங்கள். பார்த்தால் வீடு சேறு போது பாகு பாசு என்ற சொற்களின் ஈற்றிலுள்ள உகரங்களே குறுகி ஒலிப்பது நம் காதிற்குத் தெரியலாகும். மற்று, விடு செறு பொது பகு பசு, என்பனபோன்ற வார்த்தைகளில் உகரம் ஈற்றிலிருந்தாலும் அது குறுகி ஒலிக்கவில்லையாகையால் குற்றியலுகரம் இல்லை. குறுகாமல் தன்னுடைய ஒருமாத்திரையைப் பெற்று ஒலிக்கின்ற உகரத்தை முற்றியலுகரம் அல்லது முற்றுகரம் என்றழைப்பர்.

முன்சொன்ன உதாரணங்களிலிருந்து நாம் ஒன்று உணரலாம். அவைகளெல்லாம் இரண்டே எழுத்துக்களை உடைய சொற்கள். அவ்விதம் இரண்டு எழுத்துக்களை உடைய சொற்களின் ஈற்றில் வரும் உகரம் குறுகி ஒலிக்கவேண்டுமானால் வீடு காசு சேறு பாகு போது அனைய சொற்களைப்போல் முதலெழுத்துக்கள் நெடில்களாகவே இருப்பது தெரிகின்றது.

இனி, உடு ஊடு உதடு உதவு, என்ற நான்கு வார்த்தைகளை எடுத்துக்கொள்ளுங்கள். இவைகளில் முதலிரண்டு வார்த்தைகளும் இரண்டு இரண்டு எழுத்துக்களை உடையன. மற்ற இரண்டு வார்த்தைகளும் இரண்டிற்கு மேற்பட்ட எழுத்துக்களை உடையன. இவைகளில் ஊடு உதடு என்ற இரண்டு சொற்களின் ஈற்றில் உள்ள உகரங்களே குறுகி ஒலிக்கும். உடு, என்ற சொல்லின் ஈற்றில் உள்ள உகரம் குறுகாததற்குக் காரணம் தெரியும். இரண்டெழுத்துச் சொல்லின் இறுதியில் உள்ள உகரம் குறுகி ஒலிக்கவேண்டுமாயின் முதலெழுத்து நெடிலாக இருக்கவேண்டுமே. உடு, என்பதில் முதலெழுத்தும் குறிலாகையால் ஈற்று உகரம் குறுகவில்லை. ஊடு என்பதில் முதல் எழுத்து ஊ நெடிலாகையால் ஈற்றில் டு வில் உள்ள உகரம் குறுகியது. உதடு, என்பது இரண்டிற்கு மேற்பட்ட எழுத்தை உடையது. பலாசு, பாடாது படகு இறும்பூது, வேண்டு, என்பனபோன்ற சொற்களில் இரண்டிற்கு மேற்பட்ட எழுத்துக்கள் இருப்பதால் அந்த வார்த்தைகளில் ஈற்று உகரத்திற்குமுன் இருக்கின்ற எழுத்துக்கள் எல்லாம் நெடிலாயிருந்தாலும் சரி, எல்லாம் குறிலாயிருந்தாலும் சரி, சில நெடிலாகவும் சில குறிலாகவும் இருந்தாலும் சரி, ஈற்றிலுள்ள உகரம் குறுகலாம். உதடு என்னுஞ் சொல்லின் ஈற்றிலுள்ள உகரம் குற்றியலுகரம். ஆனால், 'உதடு, உதவு' என்ற இரண்டு சொற்களையும் உச்சரித்துப் பாருங்கள். உதடு என்ற சொல்லின் இறுதியில் ட் என்னும் எழுத்தின்மேல் ஏறியிருக்கின்ற உகரம் குறுகியிருக்கின்றது. உதவு என்னும் சொல்லின் இறுதியில் வ் என்னும் எழுத்தின்மேல் ஏறியிருக்கின்ற உகரமோ குறுகவில்லை. ஆதலால் இரண்டிற்கு மேற்பட்ட எழுத்துக்களையுடைய சொற்களின் இறுதியில் வந்தாலும் உகரம் குறுகியே தீரவேண்டுமென்ற நியதி இல்லை.

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—30. வியாகரணம்

[144-வது பக்கத் தொடர்ச்சி]

(vi) அப்பரும் குற்றியலுகரமும்—

(a) பவணந்தியும் குற்றியலுகரமும்

குற்றியலுகரம் யாதென்பதற்குத் தக்க சூத்திரம் நன்னூலில் காணப்படவில்லை:—

"நெடிலோ டாய்த முயிர்வலி மெலியிடை
தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகரம்
அஃகும்; பிறமேற் றொடரவும் பெறுமே" என்னும்

ஒருசூத்திரமேகுற்றியலுகரத்திற்கு விதியாய்மாணவர்கள் கொள்ளவேண்டியவர் போல் காணப்படுகின்றது. இது குற்றியலுகரமென்னும் தன்மையை விளக்கும் பல்வகைஅம்சங்களைச் செறித்து இனிது செப்புவதற்குரிய திட்பநுட்பஞ் சிறந்த சூத்திரமன்றென்பது வெளிப்படை. கூறியவரையிலும், பழுதற்றதோவென்பதும் சந்தேகமாயிருக்கின்றது. (தனி) நெடிலோடும், ஆய்தமும், உயிரும், வல்லொற்றும், இடையொற்றும், மெல்லொற்றுமாகிய இவ்வெழுத்துக்களினுள் யாதானுமொன்று தொடர மொழியின் யிறுதிக்கண் வல்லொற்றுக்களை ஊர்ந்துவரும் உகரம் தன் மாத்திரையிற் குறுகுமென்பது இச்சூத்திரத்தின் முதற்பாகமாம். 'நெடில்' என்பது 'தனி நெடில்' உரையிற் கோடலாம். ஆயினும் பவணந்தி, தொடர்மொழி.* யாதென்று விளக்காமையாற் சூத்திரச் சொற்றொடர்களின் வண்ணம் தனிக்குறிலுக்குப் பின்வரும் வன்மையூர் உகரம், நீக்கப்படவில்லை. ஆசிரியர், தொல்காப்பியனாரது சூத்திரத்தை மாற்றாமல் அவ்வாறே பவணந்தி பயன்படுத்தி யிருப்பாராயின், சொற்றொடர்க் குற்றம் நேர்ந்திராது. தொல்காப்பியனார் வரையறுக்கும் செம்மை காண்க:—

"நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழி யீற்றும்
குற்றியலுகரம் வல்லா றூர்ந்தே"

என்பர். குற்றியலுகரத்திற்கு முன்னர் வருவது ஓரே எழுத்தாயின் அது நெட்டெழுத்தா யிருக்க வேண்டுமென்றும் இன்றேல் **எழுத்துக்கள் தொடர்ந்த** மொழியாயிருக்கவேண்டுமென்றும், அதாவது இரண்டெழுத்தாகிலும் வன்மையூர் உகரத்திற்குமுன் நின்றால்தான் குற்றியலுகரம் உண்டாகலாமென்றும் சுட்டிக் காட்டுகின்றார்.

இவ்வாறு பவணந்திமுனிவர் சுட்டிக்காட்டாததற்குக் காரணம், குற்றியலுகரத்தின் மெய்த்தன்மையை யுணராமையேயாம். இதனால் குற்றியலுகரத்திற்குச் சம்பந்தப்பட்ட எல்லா நன்னூற் சூத்திரங்களினும் இக்குறைவு நிறைந்து விளங்குகின்றது. அதைப் பின்னர்க் காண்போம்.

நமது இலக்கியமுழுவதும் செய்யுள் இலக்கியமாய் நம் முன்னோர் காலத்தில் நின்று வந்ததால், குற்றியலுகரத்தைமாணவர் இருமுகத்திற் காணவேண்டியதாயிற்று. அவையாவன: எழுத்தியல்வகை ஒரு முகமாகவும், இசைவகை மறுமுகமாவும் நின்றனவாம். முன்னது, பொருள்தரு நிலைமையை ஆய்ந்து சொல்லாகச் சேர்த்துச் சொல்வது. பின்னது, மாத்திரை குறைந்து நிற்கும் நிலைமையை நோக்கி ஒன்றை எழுத்தெண்ணப்படாது என்று அதற்கு வேறாகக் கூறுதல். இதற்கு விதி.

"மொழிப்படுத் திசைப்பினுந் தெரிந்துவே றிசைப்பி
எழுத்தியல் திரியா வென்மனார் புலவர்." [னும்
(தொல் - மொழிமரபு - 20)

இதனை, தொல்காப்பியனாரது புணரியற் சூத்திரங்கள் முதல் மூன்றுடன் சேர்த்து நோக்குக. குற்றியலுகரமும் புள்ளியீறுபோல உயிர் ஏறுதற்கு இடங்கொடுக்கு மென்பதை விளக்கிய மூன்றாஞ் சூத்திரத்திற்கு, நச்சினார்க்கினியர் "அங்ஙனம் உயிரேறுங்கால் குற்றுகரங் கெட்டுப் போக ஒற்றின்மேல் உயிரேறிற்றென்று கொள்ளற்க; நாகரி தென்புழி முன்னர்க் குற்றுகரவோசையும் பின்னர் உயிரோசையும் பெற்று, அவ்விரண்டுங் கூடி நின்றல்லது, அப்பொருள் உணர்த்த

---

* "தொடர் மொழி" என்பதன் பொருள் பின்வரும் தொல்காப்பியச் சூத்திரத்தா லுணர்க:—

"ஓரெழுத் தொருமொழி யீரெழுத் தொருமொழி
யிரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி யுளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே."
தொல் - மொழிமரபு. 12.

லாகாமையின், இஃது உயிரோடுங் கூடி நிற்குமென்ருர்'' என உரை கூறுவார்:—

பார்த்திருந் தடிய னேனுன்
பரவுவன் பாடி யாடி.
மூர்த்தியே யென்ப னுன்னை
மூவரின் முதல்வ னென்பன்
ஏத்துவா ரிடர்க டீர்ப்பாய்
தில்லைச்சிற் றம்ப லத்துக்
கூத்தாவுன் கூத்துக் காண்பான்
கூடநான் வந்த வாறே.

கோயில் - திருநேரிசை 6.

என்னும் திருநாவுக்கரசர் திருப்பாசுரத்தில், ''பார்த்திருந்து'' என்பதில் ''பார்த்து'' என்பதின் குற்றியலுகரவீறு ஓசைகெடாமலே வருமொழி முதலிலுள்ள 'இகரம்' ஏற இடங்கொடுத்திருப்பது இச்செய்யுளை இசையிற் பாடும்போது நன்ருய் விளங்கும். மற்றும் கீழ்வருந் திருத்தாண்டகப் பாசுரங் காண்க:—

எனக் கென்றும் மினியானை யெம்மான் றன்னை
யெழிலாரு மேகம்ப மேயான் றன்னை
மனக்கென்றும் வருவானை வஞ்சர் நெஞ்சி
னில்லானை நின்றியூர் மேயான் றன்னைத்
தனக்கென்று மடியேனை யாளாக் கொண்ட
சங்கரனைச் சங்கவார் குழையான் றன்னைப்
புனக்கொன்றைத் தாரணிந்த புநிதன் றன்னைப்
பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டே னனே

திருப்பூந்துருத்தி - திருத்தாண்டகம் 3.

இச்செய்யுளில் ''எனக்கென்றும்''; ''தனக்கென்றும்'' வரும் மொழித்தொடர்களில், எனக்கு,தனக்கு என்பவற்றின் ஈற்று உகரம், உச்சரிப்பில் முற்றும் கெட்டதாக ஒலிக்கப்படவில்லை. ''உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்'' என்னும் நன்னூல் விதிக்கு உரையாசிரியர் ''கெடுமென்னது ஓடுமென்றமையாற் குற்றுகரம் ஓரோவழி இ ஈ ஐவழி யென்னும் பொதுவிதி பெறுதலுங் காண்க'' என்று உரையினைக் கூறி, நன்னூல் 303-ம் சூத்திரத்தின் ஈற்றடியாகிய ''தன்முக மாகத் தானழைப்பதுவே'' என்பதையும், உரையாசிரியர் சங்கர நமச்சிவாயப் புலவர் நன்னூல் 300-வது சூத்திரமாகிய ''ஆற னொருமைக்கு அதுவும் ஆதுவும்'' என்னும் அடியையும் மேற்கோளாகக் காட்டுகின்ருர். இவ்வாறு சொல்மயக்கம் பெற்ற மூலத்திற்குப் பொருள்மயக்கமுடைய இந்த உரை நன்கு பொருந்துமாயினும், மூலச்சூத்திரமும்,அதன் உரையும் தொல்காப்பியனுர் கருத்துணராமையாகிய தன்மைக்கே உதாரணங்க ளாகலாம். குற்றியலுகர வகைகளும், வேறுபாடுகளும் உணர்ந்தாலன்றிக் குற்றியலுகரப் புணர்ச்சியின் தன்மையை விளக்கலாகாதாதலால், அதை இனிக் காண்போம்.

தேவகி

[150-வது பக்கத் தொடர்ச்சி]

அத்தியாயம் 5.

குடந்தைமா நகரினின்று நான் புறப்பட்ட தினத்திற்கு மறுதினம் மாலை சித்தூர் புகைவண்டி நிலயம் வந்து சேர்ந்தேன். புகைவண்டி நின்றதும் கீழேயிறங்கிய நான் ஜமீன்தாரின் பணியாளை எதிர்நோக்கி நின்றுகொண்டிருந்தேன். வருடங்கள் பலகண்ட சரிகைத் தலைப்பாகை தரித்தனுய் இராணுவ உடை பூண்ட ஒருவன் 'ஜமீன்தார் மனைக்கு வருகின்றீரோ' என்று எதிர்ப்பட்ட ஒவ்வொரு பிரயாணியையும் கேட்பதும் ஒவ்வொரு வண்டியுள்ளும் நோக்குவதுமாய் அங்குமிங்கும் விரைந்துகொண்டிருந்தான். பிரயாணிகளில் நானும் ஒருத்தி யானபடியினுல் என்னையும் நெருங்கிக் கேட்பான் என்று நினைத்து முதுமையின் குறிநிறைந்த அவன் முகத்தினை நோக்கியவண்ணமாய் நின்றேன். நான் எண்ணியபடியோ வொன்றும் நிகழவில்லை. நல்லுடையும் தாதியும் பெட்டிகளும் என்னிடம் இல்லையாதலால் என்னை யெப்படி அவன் கவனித்தல் கூடும். என் செய்வது என்று சிறிது சிந்தித்தேன். அவன் வழியில்நானே சென்று அவனது கவனத்தை இழுக்க எண்ணி முயன்றேன். எனது இருமலும் செருமலும் பயன்படாமற் போயின. வேறு வழியொன்றுமிலாது போகவே, அவனருகு சென்று, ''ஐயா, யாரைத் தேடுகின்ருய்' என்று கேட்டேன். சற்று நின்று என்னை உற்று நோக்கினுன். நோக்கிப் பின், 'பெண்ணே, உன்னை நான் தேடிவரவில்லை' என்று விடையளித்து வேறுதிசையில் தன் நாட்டத்தைப்போக்க, நான் மீண்டும் 'ஐயா......என்று வாய் திறக்குமுன், ''ஏனடி யாத்தா, என்னைவிடமாட்டாய் போலிருக்கின்றதே. உன்னை நான் தேடிவரவில்லை. உனக்குப் பதில் சொல்லிக்கொண்டிருக்க நீ வைத்த பணியாளும் நான் அல்லன்'' என்று பதில் உரைத்தான்.

''என் பணியாளன் அல்லன் என்பதை யறிவேன். உன்னை ஏவல் கொள்ளவும் நான் அழைக்கவில்லை!''

''பின் என்னை யேன் அழைத்தாய். எனக்கு நாற்பத்தைந்து வயதாகின்றது. உன்னைப்போல் பலரைப் பார்த்திருக்கின்றேன். என் சரிகைத் தலைப்பாகையைக் கண்டு மயங்காதே. பெரிய ஜமீன்தார் என் அப்பனுக்கு அளித்தது இது. நான் ஜமீனில் வேலைபார்ப்பவன்; சம்பளமும் அதிகமில்லை. இரண்டு பிள்ளைகளும் இரண்டு பெண்களும் இருக்கின்றனர். மனைவியுமிருக்கின்ருள். வயதும் முதிர்ந்தவன். நாலைந்து வருடங்களுக்குமுன் பிச்சைக்காரி ஒருத்திக்கு இரங்கி ஒரு அணுக் காசும் வெற்றிலைபாக்கும் கொடுத்ததற்கு நான் பட்டபாடுபோதும். நீயோ இளம்பெண். இவ்வூர் பொல்லாத வூர். நீயும் நானும் பேசிக்கொண்டிருந்தது என்னுடைய மனைவியின் காதிற்குள் நுழைய நேரமாகாது. அம்மா நீ போய்வா. வேண்டுமெனின் காலணுத் தருகின்றேன். போய்விடு'' என்று அவன் பரிகசித்துப் பேசவும் நான் அவனைச் சீறிவிழித்தேன்.

'' அடிபெண்ணே எத்தனையோ பலர் சீறிச் சீறிப் பார்க்க நான் பார்த்துள்ளேன். உன் வெருட்டலுக்கா அஞ்சப்போகின்றேன்.''

''நீ கொடுப்பதில் கர்ணன், உன்னிடம் பிச்சைப் புகவும் நான் வரவில்லை. வயது முதிர்ந்த உனக்கு வயதொடு உன் புத்தியும் முதிராததற்கு வருந்துகின்றேன். நீ சிறிது வாயை அடக்கிப் பேசவேண்டும். என்னை யாரென்று மதித்தாய்.''

''நானு! நீ சிறு பெண், அழகுடையவள். சில வருடங்களுக்குமுன் நான் உன்னைக் கண்டிருப்பேனுயின் என் சரிதையே வேருயிருக்கும்...''

''திக்கற்ற பெண்ணொருத்தியிடம் இன்னபடி பேசத்தான் உன் வயதும் அனுபவமும் கற்றுவித்தனவோ. நன்று, நன்று. பெண் பிள்ளைகளை நீ பெற்ற விதம் நன்று. சிறிது நிதானித்துப் பேசுவாய்.''

''அம்மா, புத்தி! உனக்கு என்னவேண்டும்.''

''உன்பால் நான் ஒன்றையும் விழையவில்லை. நான் இப்பதி யுறைகின்ற ஜமீன்தார் வீட்டிற்கு வந்துள்ளேன். என்னை அழைத்தேகுவாய்.''

''ஜமீன்தார் மனை அன்னசத்திரமன்று. அவர் போட்டதெல்லாம் போதும். இவ்வூரில் வீடுவாசல்களுமுண்டு, தனவந்தர்களும் இருக்கின்றனர்.''

''ஜமீன்தாரை வாழ்விக்கவந்த நற்சேவகன்நீஎன்று அறிய மகிழ்கின்றேன். என் பெயர் தேவகி.''

''தேவகி,நல்ல பெயர்தான். எந்தக்கம்ஸன் அம்மா, உன் அண்ணன்? வஸுதேவன் ஒருவனைக் கைப்பற்றி எம்பெருமான் அனைய பிள்ளைப்பேறு பெறுவாய்.''

''உன் வாழ்த்துரை போதும். நான் குடந்தையிலிருந்து வருகின்றேன்.''

''குடந்தையிலிருந்தா! அது நல்ல ஊர். கோயில் குளங்கள் இருக்கின்றன. என் மைத்துனியின் மகளின் மருகன் அவ்வூரான். சில மாதங்களில் அங்குச் சென்று நான் ஸ்வாமிதரிசனம் செய்துவர எண்ணியுள்ளேன்.''

''உன் க்ஷேத்ராடனச் செய்தியைக் கேட்க நான் வரவில்லை. ஜமீன்தார்மகளுக்கு ஓதுவிக்கும் வேலையை யேற்று வந்துளேன்.''

''ஓ, அப்படியா, உன் வயதும், உடையும், தோற்றமும் உன் ஓதுவிக்கும் திறமையை விளக்குகின்றன. மகளிருக்கட்டும், அவள் அப்பனுக்கே நீ மந்தரம் ஓதலாம். எழிலுமுளது, சொற்றிறமு முளது.''

''நாக்கை நீட்டுகின்ருய். நீ இதற்கு மிகவருந்த நேராமற்போகாது'' என்று நான் சொல்லிக் கைக்குட்டையால் என் முகத்தை துடைத்துக்கொண்டிருக்கையில், என் கையிலிருந்த ஓர் கடிதம் கீழே விழுந்தது, அதனில் காணப்பட்ட ஜமீன் முத்திரையைக் கண்டதும், அவ்வேலையாளன், என் சாமான்களை எடுத்துக்கொண்டு வாய்திறவாமல் முன்நடந்தான். அவனைத் தொடர்ந்துசென்றேன். புகைநிலயத்திற் கயலில் நின்றுகொண்டிருந்த இரட்டைக்குதிரை பூட்டிய வண்டியில் சாமான்களை வைத்துவிட்டு, என்னை அதனில் ஏறிக்கொள்ளுமாறு கூறினுன். அங்ஙனமே ஏறிக்கொண்டேன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அடர்ந்த மரங்களையுடைய தோட்டத்தின் இடையமைந்த ஒரு மாளிகையின்முன் வண்டி போய் நின்றது. என்னை அழைக்க வந்த ஆள் எனது மூட்டையை எடுத்துக்கொண்டு மாளிகையினுட் சென்றுன். நானும் அவனைத் தொடர்ந்து சென்றேன். பெரியதும் பழைமையுடையதுமான கூடங்கள் பல கடந்து ஒரு படிக்கட்டின் வழியே சென்ருேம். அப் படிக்கட்டினூடு பன்னிருவர் எளிதாக ஏறிச்செல்லலாம். வியப்பு விளைவிக்கும்தோற்றமுடைய இம்மாளிகையும் நானேறிச்சென்ற படிக்கட்டும் பழைமையொடு பழுதும் உடையனவாயிருந்தன. முதற்றளம் சென்றேன். ஆங்கோர் அம்மையார் இருக்கையொன்றில் அமர்ந்திருந்தார். அவ்வம்மையைக் கண்டவளவில் என்னை யழைத்தேகிய பணியாள் மரியாதையொடு தலைவணங்கி நின்ருன். அவ்வம்மையும் அருமைபொலிமுகந்தந்து, ''வாடியம்மா, நீதானு' என்று கூறி வரவேற்ருர். அக்குரல் எனக்கு அதிகமும் அமைதி யளித்தது.

என் மாமன் இறந்தபின்னை, இப்பரிவுகூர் வரவேற்பை இன்றே பெற்றேன். என்னைத் தாயினும் பரிந்து வரவேற்ற பெருந்தகையார்க்கு வயது அறுபதிருக்கலாம். பெருந்தகைமைப் பேரொளியும் தண்ணளியும் அவர்முகத்திற் பொலிந்தன. ஜமீன்தாரின் அன்னையராய் அவரிருக்கவேண்டுமென நான்நினைத்தேன். நான் நினைத்தபடி அவ்வம்மையார் அவ்வில்லுடையண்ணலுக்கு அன்னையே என்று பின் தெரியவந்தது. ஏதோ என்னைக் கேட்பதற்கு வாய்திறந்த அவ்வம்மையார், என்மெய்சோர்ந்திருப்பதுகண்டு, 'அம்மா, நின் தளர்வுதீர நீராடி உணவருந்தச் செல்'' என்று பணித்தருளி அவ்விடம் பெயர்ந்தகன்ருர். ஒருபுறமொதுங்கி நின்ற பணியாளன் எனக்கென நியமிக்கப்பெற்ற அறைக்கு என்னை யழைத்தேகினுன். எனது அறையிலே சாமான்களை வைத்துவிட்டு ஸ்நானத்தை முடித்துக்கொண்டேன். என்னறைக்கு உண்டிவர அதை உண்டு பின் துயிலிலாழ்ந்தேன்.

துன்பமில்லாத்துயிலை எனக்களித்த அவ்விரவும் மெல்லமெல்ல விடியலாயிற்று. நானுமெழுந்து காலைக்கடன்களைமுடித்துக்கொண்டுஉணவருந்தி என்னறையிலிருந்தேன். அச் சமயம் இவ்வில்லத்தலைவி பெருந்தகை யம்மையார் ஓரிளஞ் சிறுமி குறுநடைபயின்று பின்தொடர என் அறைக்கண் போந்தார். போந்தவரை எழுந்து நின்று வரவேற்றேன். அவரும் அருகிருந்தவோ ராதனத்தில் அமர்ந்தார். உடன்வந்த அவ்விளஞ்சிறுமி அம்மையின் மடியில் வைகினள். அவர் பணித்தருள நானுமோர் இருக்கையில் உட்கார்ந்துகொண்டேன். வந்த அம்மையார் பேசுவதற்கு நிபம் ஒன்று தேடுவார்போல் என் அறையின் நாற்புறமும் கண்போக்கிக்கொண்டிருந்தார். நானும் அவர் திருவாயை நோக்கியவண்ணமா யிருந்தேன். நேரம் சிறிது இன்னபடி மௌனத்திற் கழியலாக, மடியிருந்தசிறுமி பொறுமை யிழந்தவளாய், 'அம்ம,' என்று எம்மௌனத்தைப் புறங்கண்டாள். அன்னையாரும் அருமையொடு சிறுமியைத் தழுவி, அவள் தொண்டைக் கனிதரும் அமுதுக்குஎதிர்நோக்க, அன்னையார் அருமையினுல் ஊக்கப்பெற்ற பேதை, ''அப்பா எப்பொழுது வருவார். அவர் ஏன் அடிக்கடி எங்கேயோ ஊருக்குப் போகின்ருர். நாம் போகின்ருேமா. குதிரை எல்லாம் காட்டிற்கு ஓட்டிவிட்டால் அப்பா எங்கும் போகாதிருப்பார். அப்பா ஏனோ நேற்று, கருப்புக் குதிரையிற் செல்லவில்லை. சாயங்காலம் கருப்புக் குதிரையைத் தொட்டேன். அது ஒன்றும் செய்யவில்லை. அப்பா ஏறிச்சென்ற வெள்ளைக் குதிரை பொல்லாத குதிரையாம். என்னை அந்தக் குதிரையின்மேல் நம் குதிரைக்காரன் ஏற்றிவைத்தான். எவ்வளவு பயமாயிருந்தது தெரியுமா. நான் அழவேயில்லை. அப்பா வரும்பொழுது எனக்கு எல்லாம் வாங்கி வருவதாகச் சொன்னுர்,'' என்று குதலையாம் அமுதை அள்

த்தாள். சிறுமி யளித்த அமுதத்தை ஆர்வமுடன் தன் ஐம்புலன்களாலும் பருகின அம்மையார், 'என்னுயிரனையாய்' என்று சொல்லி அவளை இறுகப் புல்லி மகிழ்ந்தார். பின், 'அப்பா உனக்கு எல்லாம் வாங்கிவருவார். உனக்குப் நல்ல படிப்புச் சொல்லிக்கொடுக்க இந்த அம்மாள் வந்திருக்கிறாள்' என்று கூறிப் பிறகு என்னை நோக்கி, 'என் மகன் மகளான இச்சிறுமியே உன் மாணவி. இவள் பெயர் இந்திராணி'' என்றார். என்னைக் கடைக்கண்ணால் மெல்லப் பார்ப்பதும் பின் கீழ்நோக்குவதுமா யிருந்த சிறுமியின் நிலவாடு முகமும், கபடமற்ற அவள் நாட்டமும், துவரிதழும், கிள்ளைமொழியும் புரிநகையும் என்னை யாட்கொண்டன. அன்னையின் மடியிருந்த சிறுமியை வாரியெடுத்து என் மடிமீதிருத்தி முத்தம் பல கொடுத்து, 'இந்திரா, என்னிடம் படிக்க உனக்குப் பிரியமுண்டா' என்று கேட்டேன். திருவனைய அச்சிறுமி நாணத்தால் தலைகவிழ்ந்து, ஒருகையாற் றன் கயல்புதைத்து, ''படிக்கின்றேன்' என்று தேனொழுக விடைமொழிந்தாள். இன்னபடி துவக்கமான பேச்சு வளரவளர, ஜமீன்தாரின் மனைவி இக் குழந்தையைப் பெற்றபின் இறந்தனரென்றும், ஜமீன்தார் மறுமணம் செய்து கொள்ள மறுக்கின்றனர் என்றும், அவர், நான் இங்கு வருமுன் வெளியூர் போனாரென்றும், ஒருவார அளவில் ஊர் திரும்பலாமென்றும் கூறினார்கள். இவ்வகை நிகழ்ந்த பேச்சு இறுதியில் என்னைப்பற்றித் தொடர்ந்தது. அப்பனையும் அன்னையையும் இழந்து என் மாமன் வீட்டில் நான் வளர்ந்ததையும், என் மாமி யெனக்கிழைத்தகொடுமையையும் என்மாமன் இறந்தபின்னை அம்மனையில் இருப்பதற்கு இயலாமற் போனதையும்பற்றியாவும் கூறினேன். என் துயரெல்லாம் அம்மையார் கண்களைக் கசியவைக்க, அவர் அருமையொடு, "குழந்தையாய், என் பெண்ணுய் இவ்வில்லில் இனிதுவாழ்வாய். இன்றுடன் உன் துயர் அற்றது'' என்றுகூறி என்னைத்தேற்றினர். அவ்வேளை பகற்போஜனத்திற்கு அழைப்புவர நாங்கள் அவ்விடம்விட்டுக் கலைந்தோம்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[148-வது பக்கத் தொடர்ச்சி]

4-ம் பத்து 7-ம் தசகம்.

1-ம் பாசுரம்.

சீல மில்லாச் சிறிய னேனும்
செய்வினையோ பெரிதால்
ஞால முண்டாய் ஞான மூர்த்தி
நாராயணா வென்றென்று
காலந் தோறும் யானிருந்து கைதலை
பூச லிட்டால்
கோல மேனி காண வாராய்
கூவியுங் கொள்ளாயே.

அவதாரிகை:—நோய்தீர்ந்ததாகக் கீழ்ப்பாட்டுக்களிலே சொல்லியிருக்க இத் திருவாய்மொழியிலே அவரது மனநோய் முழுவதும் தீராதார்போல் கூப்பிடுவானேன் என்ன? மோஹதசையை யடைந்த ஆழ்வார் அமிர்தம்போன்ற பகவானது திருநாமங்களாலே தன் அறிவு உணர்ச்சி ஆகியவைகளை அடைந்தாலும் அது நிறைவேற அவனோடு கலவையின்றித் திருப்திவாராததினால் "காணவாராய்'' என்று எம்பெருமானைக் கூப்பிட்டழைக்கின்றார்.

உரை :—ஞாலமுண்டாய் - சிறியோர் பெரியோர் என்று பக்ஷபாதமில்லாமலே எல்லா உலகங்களையும் உன்வயிற்றில் வைத்து இரக்ஷித்தாய், ஞானமூர்த்தி - பக்தர்களது கஷ்டம் நிஷ்டூரம் அடங்க அனைத்தையும் அறிந்தவனே. நாராயணா-பக்தர்களுக்கும் பிறர்களுக்கும் எல்லாவற்றையும் சாதிக்கவல்லவனே, என்றுஎன்று, காலந்தோறும்-எல்லாக்காலத்திலும், யானிருந்து-யான் அவதானமாய்த் தவமிருந்து, கை தலை பூசலிட்டால்-உனக்கு இரக்கம்உண்டாகும்படி தலைமேல் கைவைத்து ஆர்த்த பெரும் சுவரத்தோடு அழைத்தாலும், கோலமேனி-அழகான திவ்விய திருமேனியை உள்ளவனே, காணவாராய் - நான் கண்ணால் காணும்படி வருகின்றாயில்லை, கூவியும் கொள்ளாயே - உன்னிடத்திற்காவது என்னை அழைக்கின்றதுமில்லை. சீலமில்லா சிறியனேனும்-நன்னடத்தை யோக்கியதை முதலான நற்குணங்கள் இல்லாத அற்பனானாலும், செய்வினையோ பெரிது-(என்னுடைய குணஹானிக்கு இவ்வளவு பாராமுகம் செய்ய இடமில்லை யாயினும்) நான் இயற்றிய பாபகர்மங்கள் பெரிதாயிருக்கவேண்டும், ஆல்-ஐயோ! இப்படி யில்லையாகில் உனக்கு இவ்வளவு நிர்தயை வரக்கூடுமோ? ஓ-தேற்றப் பொருளில் வந்தது.

2-ம் பாசுரம்.

கொள்ள மாளா வின்ப வெள்ளம்
கோதில தந்திடுமென்
வள்ள லேயோ வையங் கொண்ட
வாமனாவோ வென்றென்று
நள்ளி ராவு நண்பகலும் நானிருந்
தோல மிட்டால்
கள்ள மாயா வுன்னை யென்கண்
காணவந் தீயாயே.

உரை:—கொள்ள மாளா - அளவுகடந்து பூரணும், இன்ப வெள்ளம்-சுகரூபமான கிருபா பிரவாகத்தை, கோதில தந்திடும் - துன்பம் கொஞ்சமேனும் கலப்பில்லாமல் அருளிக்கொடுக்கும், என் வள்ளலே - என் பரம உதார சுபாவமுள்ளவனே, (ஓ-இப்படி உள்ள பிரபுவுக்குக் கிருபை வரவில்லையே, துக்கத்தால் அலறிக்கூப்பிடுகிறபடி) வையம் கொண்ட வாமனா ஓ-தனக்கு ஸம்பவிக்கும் குறைவை நினையாமல் இந்திரனை தம்பிக்காக வாமனனாய் முன் மூன்றுஉலகங்களையும் யாசித்தவனே, (ஓ-முன்போல் துக்கஹேதுக்குறிப்பு) என்றென்று - இப்படி, இராவும் நண்பகலும் நான் இருந்து ஓலமிட்டால்-நான் இடைவிடாமல் ஏங்கிய ஸ்வரத்தோடு கூப்பிட்டாலும், கள்ள மாயா-ஒருவராலும் கண்டுகொள்ளவும்அளவிடக்கூடாததுமான ஆச்சரிய சக்தியுள்ளவனே, உன்னை என் கண்காண வந்து ஈயாயே - உன்னை என் கண்கள் காண்கைக்கு ஈடாய்

அருள்புரியாதவனாய் இருக்கின்றாய். அடியேன் காண வேணும் தரிசனங் கொடு என்கிறார்.

3-ம் பாசுரம்.

ஈவி லாத்தீ வினைக ளெத்தனை
செய்த னன்கொல்
தாவி வையங் கொண்ட வெந்தாய்
தாமோதரா வென்றென்று
கூவிக் கூவி நெஞ்சுருகிக் கண்பனி
சோர நின்றாற்
பாவி நீயென் றொன்று சொல்லாய்
பாவியேன் காணவந்தே.

உரை:—தாவி வையங்கொண்ட-இந்திரனுக்காகப் பலிசக்கரவர்த்தியிடத்தில் மூன்றடியாசித்து மூன்று உலகங்களையும் அளந்துகொண்டவனும், எந்தாய் - என்னையும் ரக்ஷிக்கும்பிரபுவும் ஆனவனே, தாமோதராவென்று - உரலோடு கட்டுப்படும்படி ஆச்ரிதர்களுக்கு அத்தியந்த சுலபனே, என்று கூவிக் கூவி - இப்படியெல்லாம் சொல்லி, நெஞ்சுருகி-மனமிரங்கி, கண்பனி சோர நின்றால் - நேத்திரஜலங்கள் சொரியும்படி நின்றால், பாவியேன் காணவந்து - யானாகிய பாவி காணும்படி வந்து, நீ பாவியென்று ஒன்று - நீ பாவி என்ற ஒரு வார்த்தையேனும், சொல்லாய் - சொல்லவேணும். இப்படி ஆழ்வார் உரைத்ததன்மேலும் பகவான் தோன்றி ஒன்றும் சொல்லக் காணாமையாலே (அதாவது, "நீ பாவி என்னைக் காணப் பாக்கியம்பெற்றிலை என்று சொல்லாமையாலே") ஈவு - முடிவு, இல்லா - இல்லாத, தீவினைகள்-கெட்ட வினைகள், எத்தனை செய்தனென்கொல்-எத்தனை யாயிரம் செய்திருக்கக் கடவேனோ.

விசேஷக்குறிப்பு:-பகவானைக் காணவேண்டுமென்ற வேட்கை மிகுதியால் ஆழ்வார் தன் நல்லறிவை இழந்தார் போலும்! ஆழ்வார் பாவியாயிருந்தால் பகவான் வந்து தோன்றல் எங்ஙனம் கூடும்? இதுவரையில் " வளவேழுலகிலும் '' இன்னம் சிற்சில சந்தர்ப்பங்களிலும் தோன்றி ஸேவை ஸாதித்ததினாலே தாம் பாவியல்லரென்று ஆழ்வாருக்குநிதர்சனமாய்த் தெரிந்திருந்தாலும் தற்காலம் விரஹவியசனத்தால் மறந்து இப்படி அருளிச்செய்தபடியாக நாம்கொள்ள வேண்டும்.

4-ம் பாசுரம்.

காண வந்தென் கண்மு கப்பே
தாமரைக் கண்பிறழ
ஆணிச் செம்பொன் மேனி யெந்தாய்
நின்றருளா யென்றென்று
நாண மில்லாச் சிறுதகை யேனு
னிங்கலற் றுவதென்
பேணி வானோர் காண மாட்டாப்
பீடுடை யப்பனையே.

பொழிப்புரை:— பிரம்மாதிகளுங் கூட ஆசைப்பட்டுக் காணமாட்டாதிருக்கின்ற பெருமை பொருந்திய ஸர்வசிரேஷ்டனை, தங்கம் போன்றவனே, என் கண் முன்னிலையில் உன் தாமரைக்கண்கள் புரண்டு திகழ நின்றருளாயென்று யான் அரற்றுவது என்ன பேதைமையோ; தராதரத்துடன் தகும் தகாதது அறியாத என்ன நாணமில்லாதவனோ நான்.

5-ம் பாசுரம்.

அப்ப னேயட லாழி யானே
யாழ்கடலைக் கடைந்த
துப்ப னேயுன் தோள்க ளான்குங்
கண்டிடக் கூடுங்கொலென்
றெப்பொ ழுதுங்கண் ணீர்கொண் டாவி
துவர்ந்து துவர்ந்து
இப்பொழு தேவந் திடாயென்
றேழையே னேக்குவனே.

அவதாரிகை:—சென்ற பாசுரத்தில் எம்பெருமானைக் காணவேண்டுமென்ற வேட்கை மிகுதி, தனக்கு மானஹானியை விளைத்ததென்றார். இப்பாசுரத்தில் அவ்வாசை மிகுதியாலேதான், இதுவரையிலும் வராத எம்பெருமான் இனி வருவனோ வென்று ஞானமில்லாமல் எதிர்பார்க்கின்றேன் என்கிறார்.

பொழிப்புரை:—ஸ்வாமியே, பராக்கிரமமுள்ள சக்கராயுதத்தை யுடையவனே, ஆழமான சமுத்திரத்தைக்கடைந்தவனே, சர்வம் வல்லவனே, உன் நான்கு திருத்தோள்களையும் காணக்கூடுமோவென்று அழுது வியாகுலப்பட்டு என்னாவி துக்கத்தால் உலர்ந்து உலர்ந்துவாட உன்வரவை எதிர்பார்க்கின்றேன். இப்பொழுதே வந்திடாயோ, என்று ஆர்த்தியுடன் அபேக்ஷித்து நீ வருகிறாயாவென்று அப்படி வருவதற்கு யாதொரு காரணமும் இல்லாதிருக்க எதிர்பார்ப்பேன், ஆசை புத்திக்கு அடங்கவில்லையென்று ஆழ்வார் பரிதபிக்கின்றார்.

காற்று மழை

Shakespeare—"The Tempest"

அங்கம் 1. களம் 2.

[132-வது பக்கத் தொடர்ச்சி]

ப்ராஸ்ப்பீரோ:—ஆ! என்னைக் காத்த வொரு தேவதையே நீ! வானின்று வந்தவோர் உறுதியின் நிறைவுதோன்றப் புன்னகை பூத்தனை. (1). என்றன் பாரத்தின்கீழ் புலம்பிய உவரியை யான், உறவுற உவர்க்கின்ற துளிகளினால் போர்த்தியபின் (2). அதுவே, வருவதற் கெதிர் தாங்கிப் பொறுத்திருக்கவல்ல உதரத்தைத் தந்தெனக் கெழுப்பியது. (3)

மிராண்டா:—நாம் கரைசேர்ந்த தெங்ஙனம் ?

ப்ராஸ்ப்பீரோ:—தெய்வச் செயலால். (4). உணவு சிறிது நமக்கிருந்தது, நன்னீருஞ் சிறிது; இவை

(1) அக்காலம் தான் எத்துணை இடுக்கண் இழைத்திருக்கவேண்டுமோவென்று நினைத்து வருந்திய மிராண்டாவிற்கு ப்ராஸ்ப்பீரோ கூறும் மறுமொழி இது. நீ என்னுடன் இருந்ததாற்றான் நான், வந்த விபத்துக்களையெல்லாம் தாங்கவல்லவனாயினேன்-என்பது இதன் கருத்து. அங்கடுக்கடலில் தனியே நாம் தவித்தபோது, ஒன்றுமறியாப் பேதைக் குழந்தையாகி இருந்த நீ இழைத்தவொரு இளநகையானது, வானவர்அருள் நமக்குஉளது என்னும் உறுதியை உணர்த்துமொரு குறியேபோல்எனக்குத் தோன்றியது.

(2) உவரி - - கடல். உறவுற உவர்க்கின்ற துளிகள்- கடலெல்லாம் மூடும்படி நான் கண்ணீர் விட்டழுதபின்- என்பது பொருள்.

(3) அதுவே - மிராண்டாவின் புன்சிரிப்பே. உதரம் - வயிறு. உதரத்தைத் தருதல், என்பது மனவுறுதியை

களோடு, சூழ்வினை யிதனை அற்றைநாள் நடத்தி வைக்கும்பொருட்டு நியமிக்கப்பெற்றிருந்த நேப்ல்ஸ் நகரத்துப் பெருந்தகை கன்ஸாலோ, தன்னுடைய பரிவினால் நமக்குக் கொடுத்த உயரிய உடைகளும் துகில்களும் இன்றியமையாத பிறவும், பின்னர் நமக்குப் பேருதவியாயிருந்தன. அவ்வாறே, அவன் தன் அன்பினால், யான் என் புத்தகங்களைக் காதலித்தே னென்பதறிந்து, என் புத்தகச் சாலையினின்றெடுத்து, எனதரசினும் அதிகமாய் யான் மதிக்கின்றநூல்களை எனக்குதவுமாறுவைத் திருந்தனன் (5).

மிராண்டா:—என்றேனும் யா னம்மனிதனைப் பார்க்க நணிநேருமோ (6).

ப்ராஸ்ப்பீரோ:— இப்போது யான் எழுகின்றேன் [தன் அங்கியை மீண்டும் அணிகின்றான்.] (17)
அமர்ந்திருந்து நீ நம் சலதிச் சஞ்சலங்களின் இறுதியைக் கேள் (8). இங்கு இத்தீவிற்கு நாம் வந்து சேர்ந்தோம். இங்கு யான், நினதாசிரியன், வீண் வேளைகளுக்கு மிகுந்த காலமும், கருத்து இத்தனை இல்லாத ஆசிரியர்களும் உடைய அரசிளங் குமரிகள் ஏனையோர் அடைபவல்லதற் கதிகமாய நன்மைகளை யுனக்குச் செய்துவைத்தேன் (9).

மிராண்டா:—கடவுளர் வந்தனம் நினக் கிதற் குரியதாகுக (10). மற்று, ஐய, வேண்டுகின்றேன்—இன்னமும் அஃதென் மனத்தினில் மோதியாங்குள து-கடலின் இக் கல்லோலத்தை நீ எழுப்பியதற்குக் காரணம் (11).

ப்ராஸ்ப்பீரோ:-இவ்வளவு தூரந் தெரிந்துகொள். வியப்பினும்வியப்புவாய்ந்த வொரு தற்செயலாய், உதார சீலமுடைய திருவாவாள்—இக்காலம் எனதருமைப்பிராட்டி (12).—இந்தக்கரையினிற்கு எனது பகைஞரைக் கொணர்ந்திருக்கின்றனள். என்றன் உச்சமானது ஓர் சுபகிரகத்தைச் சார்ந்திருக்கின்றதென்றும், அதன் அதிகாரத்தை இப்பொழுது நான் ஆராதிப்பதின்றி விட்டுவிடுவேனாயின், பின்னரெந்நாளும் என் அதிர்ஷ்டமானது சாய்ந்தேகிடக்குமென்றும், எனது முன்னறிவினா லுணர்கின்றேன் (13). இனி, மேலே கேள்விகளை நிறுத்திக் கொள். துயில்வதற்கு நீ இச்சையுடையவளாயிருக்கின்றாய். செவ்விய சோர்வே யது. அதற்கு வழிகொடு—இத் துயிலினை நீ விலக்குதற் கியலாயென எண்ணுகின்றேன் (14)—

[மிராண்டா துயில்கின்றாள்]

வந்துவிடு, பணியாள, வா! யானிப்பொழுது ஆயத்தமா யிருக்கின்றேன். அருகு வா, என் ஏரியல்; வா!

அடைதல் என்னும் பொருளில் வழங்கப்பெறுவது ஷேக்ஸ்பியர் காலத்து ஆங்கில மரபு.

(4) தெய்வச் செயலால் நாம் கரை சேர்ந்தோம்-என்று முடித்துக்கொள்க.

(5) நேப்ல்ஸ் மன்னனது அவையினைச் சேர்ந்தவர்களில் ஒருவன் கன்ஸாலோ என்பவன். ப்ராஸ்ப்பீரோவிற்கு விரோதமாக அன்டோனியோவிற்கு உதவி செய்ய உடன்பட்ட நேப்ல்ஸ் அரசன் அக்காரியத்தை நடத்தி வைப்பதற்கு இந்தக் கன்ஸாலோவை நியமித்து அனுப்பியிருந்தான். கன்ஸாலோவோ ப்ராஸ்ப்பீரோவின்பால் பரிவு கொண்டு, சிறிது உணவு தன்னீர் ஆடை முதலியவைகளைப் பிராஸ்ப்பீரோவின் படகினில் அவனுக்கு உதவுமாறு வைத்திருந்தான். அதுவுமன்றி, ப்ராஸ்ப்பீரோவிற்கு அவன் அரசினும் அதிகம் அருமையாய புத்தகங்கள் சிலவற்றையும் அப்படகில் வைத்திருந்தனன்.

(6) தம்பால் இவ்வளவு பரிவுகாட்டிய அந்த நல்ல மனிதனைத் தான் காண்பதற்கு அவாவுவதாக மிராண்டா கூறுகின்றாள்.

(7) தன்மந்திரத்தால் ஜாலங்கள் செய்யும்போது ப்ராஸ்ப்பீரோ அதற்கென்று ஓர் மந்திர அங்கியை அணிந்திருத்தல் வேண்டும். அதனைப் போட்டுக் கொண்டுதான், காற்றும் மழையும் அடித்து, அக்கப்பலை உடைப்பது போல் தன் குட்டிச்சாத்தான்களைக் கொண்டு செய்வித்தான். மிராண்டாவுடன் பேச வாரம்பித்தபோது கழற்றி வைத்திருந்த அவ்வங்கியை மீண்டும் இப்பொழுதுஅணிந்துகொள்கின்றனன்.

(8) தன்னுடன் எழுந்த மிராண்டாவை, "நீ எழுந்திருக்க வேண்டா" என்று உட்காரச்சொல்லிக் கதையைத் தொடர்கின்றான். சலதிச் சஞ்சலங்கள் - கடலிற்பட்ட கஷ்டங்கள்.

(9) இத்தீவில் என்னுடன் வளர்ந்த உனக்கு யான் நல்லாசிரியனாகவிருந்து, அரண்மனையில் வீண்காலம் போக்கியும் கூலிக்குக் கற்பிக்கும் ஆசிரியரிடம் பாடம்கற்றும் வளர்கின்ற அரசிளங்குமரிகள் ஏனையோரைக்காட்டிலும், அதிகமான நன்மைகளை உனக்கு நான் செய்து வைத்தேன்—என்பது கருத்து.

(10) நீ என்னைக் காத்தளித்துக் கற்பித்த நலங்களுக்குக் கைம்மாறு கடவுளர் புரிந்தாலன்றி யான் என்ன செய்யவல்லேன் - என்பது கருத்து,

(11) கல்லோலம் - பெரிய அலைகள். "காரணம்—.... வேண்டுகின்றேன்", என்று கூட்டிக் கொள்க.
அது - காரணம் யாவதென்ற ஐயம். மோதியாங்குளது - என் மனத்தைத் திகைக்கச் செய்தவண்ணமாயிருக்கின்றது.

(12) திரு - அதிர்ஷ்டதேவதை. முன் எனக்கு விரோதமாயிருந்த அதிர்ஷ்டமானது இப்பொழுது அருமையுடன் என்சார்பு நிற்றலால், நான் எதிர்பார்க்காமலே, என் சத்துருக்கள் நம் தீவிற்குகருகு கடலில் வரும்படி நேர்ந்தது—என்பது பொருள்.

(13) இப்பொழுது எனக்கு நல்லகாலம் வரவிருக்கின்றதென்று உணர்கின்றேன், ஆகையால் இச் செவ்வியைக் கைப்பற்றிச் செய்யவேண்டியவைகளைத் தக்கபடிஉடனே செய்யாமல் ஒழிவேனாயின், பிறகு எந்நாளும் நான் இத்தீவிலேயே கிடக்கத்தான் வேண்டி நேரும் - என்பது கருத்து.

(14) தன்னுடைய குட்டிச்சாத்தான் ஏரியலை வரவழைக்குமுன், ப்ராஸ்ப்பீரோ மிராண்டாவைத் தன் மந்திரத்தால் இவ்வண்ணம் சொல்லிச் சொல்லித் துயில்விக்கின்றான்.

எமாங்கதத் திளவரசன்
ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,
எழுதியவோர்
செந்தமிழ்க்காதை.
கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

மாவை - கொல்லங்கலட்டி கேணிக்கரை

வீரகத்தி விநாயகர் திருவூஞ்சல்

காப்பு.

சொல்லுமறை யந்தணர்வே ளாள ராதித்
தொல்குடியும் பல்வளமுந் துதைந்தே யோங்குந்
தெல்லிநகர் மாவைகொல்லங் கலட்டி கேணித்
திருக்கரைவா ழொருத்தன்முகச் செல்வா வுன்மேல்
செல்லலழி யற்புதர்புத் தமுத வின்பச்
செழுந்தமிழா லூஞ்சலிசை தெளிந்து பாடக்
கல்விதரு மோங்கார வடிவா முன்றன்
கற்பகஞ்சேர் பொற்பதங்கள் காப்ப தாமே.

நூல்.

ஒளிமருவு நாதவிந்து தூணு நாட்டி
உரைமருவு மிருமொழியும் விட்டம் பூட்டித்
தெளிமருவு சிவகலைநால் வடங்கள் மாட்டிச்
சிவமருவு மோங்கார பீடங் கூட்டி
மொழிமருவு மந்திரதோ ரணங்கள் நீட்டி
முதமருவ வியற்றியபொன் னூஞ்சன் மீதே
வெளிமருவு பொழிற்கொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீ ரூஞ்சல். 1.

விண்பயிலு மொண்சுடர்கள் குடைகள் தாங்க
வெளிபயிலும் வளிவேந்தர் கவரி வாங்கத்
தண்பயிலும் புனலரசன் பனிநீர் தூவத்
தார்பயிலுங் கொடிநிரைக ளமரர் காவ
எண்பயிலு மலரயனு ராசி பேச
இனம்பயிலும் விரைமலர்கள் முனிவர் வீச
மின்பயிலும் பொழிற்கொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீ ரூஞ்சல். 2.

ஏழாளு மிசைமுனிமா டகயாழ் மீட்ட
எழிலாளுந் தொழின்முடிவு நெடுமால் கூட்டத்
தாளாருந் தமிழ்முனிவன் தாளம் போடச்
சதியாளும் பூதகண நாத ராடக்
கேளாளும் பழவடியார் வினைக ளோடக்
கிளியாளும் மொழிமடவார் வடந்தொட் டாட்ட
வேளாளர் பயில்கொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீ ரூஞ்சல். 3.

திங்களணி செஞ்சடையுஞ் செம்பொற் கொம்பும்
செம்மையணி மணிமார்புந் திருமுந் நூலும்
கொங்கலருங் கொன்றையணி குவவுத் தோளும்
குடவயிறும் விகடநடங் கொண்ட தாளும்
ஐங்கரமும் நால்வாயும் மூன்று கண்ணும்
அம்மையிடப் பாகமுமா யாகு வேறி
வெங்கலிதீர்க் குங்கொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீ ரூஞ்சல். 4.

மந்திரநீர் பாலிளநீர் மணநீ ராட்டி
மான்மதஞ்சந் தனம்பளிதம் மலியக் கூட்டிச்
சுந்தரப்பூம் பட்டுடுத்திக் கலன்கள் பூட்டித்
தூயமணி மாலைதொடை மாலை சூட்டிக்
கந்தநறும் புகையெடுத்து விளக்கங் காட்டிக்
கழல்பரவு மடியரிடர் கழிய வோட்டி
வெந்துயரம் வீட்டுகொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீ ரூஞ்சல். 5.

பருப்புநறுஞ் சருக்கரையும் பாலுந் தேனும்
பாசவலுந் தினையிடியும் பழமும் பாகும்
கரும்புமுறி முறுக்குவடை கண்டுஞ் சுண்டுங்
கடலைபொரி மோதகமும் மடையுங் காயும்
திருப்பொலிபுத் தமுதுமிளந் தெங்கின் காயும்
சீரடியர் தந்துமந்தி ரத்தாற் போற்ற
விருப்பொடருள் புரிகொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீ ரூஞ்சல். 6.

சுந்தரப்பொன் முடியாடச் சுடிகை யாடத்
தூயசடை மதியாட நதியு மாட
வந்துமுறச் செவியாட மகிழ்வு மாட
மாணிக்க வடமாட மதாணி யாட
முந்துகுட வயிறாட முந்நூ லாட
முழுதுலகுங் களிபாட நடன மாடும்
வெந்துயரம் வீட்டுகொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீ ரூஞ்சல். 7.

ஓதுவிந்து நாதமுற வுதித்தா யென்றும்
ஓங்கார மூலமறை விதித்தா யென்றும்
மோதகமுங் கோடுமணி கையா வென்றும்
மூவிதமங் கலஞான மெய்பா வென்றும்
வேதபரி புரகமல பாதா வென்றும்
விக்கினங்கள் தீர்த்தருளும் நாதா வென்றும்
மேதையர்கள் துதிகொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீ ரூஞ்சல். 8.

கரிமுகனைக் கொன்றமரர் கணத்தைக் காத்தாய்
காகுத்தன் கொலைப்பழியைக் கணத்திற் றீர்த்தாய்
திரிபுரத்தை யெரிக்கவரு தேரைப் பேர்த்தாய் [ய்
தினைக்குறவர் மலர்க்கொடியைச் சேய்க்குச் சேர்த்தா
புரிநெகிழா விருவினையும் போகப் பார்த்தாய்
புனல்கவிழ்த்துப் புருகூதர்க் கருளைக் கூர்த்தாய்
விரிமலர்ப்பூம் பொழிற்கொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீ ரூஞ்சல். 9.

வரதகர வபயகுட வகட கும்ப
மதவறுகு முகசுமுக வரவே ரம்ப
பரதநட கமலபத நிமல போத
பரமசுக வமுதநித மருளு நாத
புரதகன னரியசுத விமல வேக
பூரணபுண் ணியபுனித புராண போக
விரததவ மலிகொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீ ரூஞ்சல். 10.

மதியமலி செஞ்சடையீ ராடீ ரூஞ்சல்
வஞ்சமலி நெஞ்சடையீ ராடீ ரூஞ்சல்
துதிமலிபோ தகமுவந்தீ ராடீ ரூஞ்சல்
சுவைமலிமோ தகமுவந்தீ ராடீ ரூஞ்சல்
கதிமலியுஞ் சலமுடித்தீ ராடீ ரூஞ்சல்
கறைமலிசஞ் சலமுடித்தீ ராடீ ரூஞ்சல்
விதியடியர் துதிகொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீ ரூஞ்சல். 11.

வாழி.

ஆவாழி யருள்வாழி யறங்கள் வாழி
அருந்தமிழும் பழமறையா கமமும் வாழி
பூவாழி பொன்னின்மழை பொழிந்து வாழி
பூதிகண்டி யைந்தெழுத்தும் பொலிந்து வாழி
தேவாழி மாவைநகர்ச் செவ்வேள் வாழி
செந்தமிழி னூஞ்சலிசை சிறந்து வாழி
மேவார்க்கு மருள்கொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரும் வாழி வாழி. 12

திருச்சிற்றம்பலம்.

கலித்தொகை

[154-வது பக்கத் தொடர்ச்சி]

பாலைக்கலி 6.

[தலைவனால் பிரிவு உணர்த்தப்பட்ட தோழி அவனை நோக்கி, "நீர் காட்டினைக் கடந்து பொருள் தேடும்பொருட்டுப் பிரியப் போகின்றீர் என்று யான் தலைவிக்குக் கூறவேனுனால், அப்பொழுது அவளுக்கு உண்டாகக் கூடியவற்றைச் சிறிது உமக்குக் கூறுகின்றேன். என்று சொல்லி, அவற்றைக்கூறி, அவன் செலவை அச்சமயம் நிறுத்தியதைக் கூறுவது இச்செய்யுள்.]

வேனி லுழந்த வறிதுயங் கோய்களிறு
வானீங்கு வைப்பின் வழங்காத்தேர் நீர்க்கவா அங்
கானங் கடத்தி ரெனக்கேட்பின் யானொன்
றுசாவுகோ வைய சிறிது:
நீயே
செய்வினை மருங்கிற் செலவயர்ந் தியாழநின்
கைபுனை வல்வின் ஞாணுளர் தீயே!
இவட்கே
செய்வுறு மண்டில மையாப் பதுபோன்
மையில் வாண்முகம் பசப்பூ ருமே!
நீயே
வினைமாண் காழகம் வீங்கக் கட்டிப்
புனைமாண் மரீஇய வம்பு தெரிதியே!
இவட்கே
சுனைமா ணீலங் காரெதிர் பவைபோ
லினைநோக் குண்கண் ணீர்நில் லாவே!
நீயே
புலம்பி லுள்ளமொடு பொருள்வயிற் செலீஇய
வலம்படு திகிரி வாய்நீ வுதியே!
இவட்கே
அலங்கிதழ்க் கோடல் வீயுகு பவைபோ
லிலங்கே ரெல்வளை யிறையூ ருமே!
எனநின்,
சென்னவை யரவத்து மினையவ ணீநீப்பிற்
றன்னலங் கடைகொளப் படுதலின் மற்றிவ
ளின்னுயிர் தருதலு மாற்றுமோ
முன்னிய தேஎத்து முயன்றுசெய் பொருளே?

(தரவு)

வேனில் உழந்த - முதுவேனிற் காலத்தாலே வருந்தின(உடல்),வறிது உயங்கு - நீர் வேட்கையால் பின்னும் சிறிதாக வருந்துகின்ற, ஓய்களிறு - ஓய்ந்த யானைகள், வான்நீங்கு - மழை நீங்குவதற்குக் காரணமான (கொடுமையை உடைய), வைப்பின் - ஊர்களிலே, வழங்கா தேர் - பேய்த்தேராகிய, நீர்க்கு அவாஅம் - நீருக்கு விரும்பி ஓடுகின்ற, கானம் கடத்திர் என கேட்பின் - காட்டிற்குநீர் போவீர் என்று யான் கூறுதலை (அவள்) கேட்பின், யான் ஒன்று - நான் ஒரு விஷயத்தை, சிறிது உசாவுகோ - சிறிது உம்மிடம் கேட்கலாமோ?

வழங்காத் தேர் நீர்க்குக் களிறு அவாஅம் கானம் எனக் கூட்டுக.

(தாழிசை)

நீயே - நீயோ, செய்வினை மருங்கில் - போருக்கு, செலவு அயர்ந்து - போக விரும்பி, நின் கைபுனை வல்வில் - உன்னுடைய கையினால் அலங்கரித்த வலிதாகிய வில்லினுடைய, ஞாண் உளர்தி - நாணைத் தடவுகின்றாய்.

யாழ - அசைச்சொல்.

இவட்கே - இவளுக்கோ, செய்உறு மண்டிலம் - (குற்றமுறாது) கையால் செய்தலுற்ற சந்திரனிடத்தில், மை யாப்பதுபோல் - மேகம் பரக்கின்ற தன்மைபோல, மை இல் வாள்முகம் - மறுவில்லாத ஒளியை உடைய முகத்திலே, பசப்பு ஊரும்-பசப்பு நிறம் பரவும்.

செய்வுறு மண்டிலம் - இல்பொருள் உவமை.

நீயே - நீயோ, வினைமாண் காழகம் - வேலைப்பாட்டால் சிறந்த துணியை, வீங்க கட்டி - இறுகக்கட்டி, புனைமாண் மரீஇய-அலங்கரிக்கும் தொழிலால் மாட்சிமை தங்கிய, அம்பு தெரிதி - அம்புகளை ஆராய்கின்றாய்.

இவட்கே - இவளுக்கோ, சுனைமாண் நீலம் - சுனையிடத்து மாட்சிமைப்பட்ட நீலோற்பலங்கள், கார் எதிர்பவை போல் - மழையை எதிர் கொள்ளுதல் (அமைந்து நீரைச் சொரியுமாறு) போல, இனை நோக்கு உண்கண் - வருந்தும் பார்வையையுடைய மையுண்ட கண்கள், நீர் நில்லா-நீர் நில்லாவாய் ஒழுகும்.

[சுனையிலே மாட்சிமைப்பட்ட நீலோற்பலங்கள் மழையினால் தாம் பெற்ற நீரைத் தம்மிடத்தில் வைத்துக் கொள்ளாமல் கீழே ஒழுக விடுவதுபோல, தலைவியின் வருந்தும் பார்வையை யுடைய மையுண்ட கண்கள் நீர் சொரியும்.]

நீயே-நீயோ, புலம்புஇல் உள்ளமொடு - வருத்தம் இல்லாத மனத்தோடு, பொருள் வயின் செலீஇய - பொருளின்பொருட்டுப் போக, வலம்படு திகிரி-வெற்றியை உண்டாக்குகின்ற சக்கரத்தினது, வாய் நீவுதி - வாயைத் (தாசு போகத்) துடைக்கின்றாய்.

இவட்கே-இவளுக்கு, அலங்கு இதழ் கோடல்வீ - அசைகின்ற இதழ்களையுடைய கோடற் பூக்கள், உகுபவை போல - உதிர்ந்து வீழ்வன போல, இலங்கு ஏர் எல் வளை - விளங்கும் அழகினையுடைய ஒளி பொருந்தின வளைகள், இறை ஊரும் - முன்கையினின்றும் கழலும்.

(தனிச்சொல்)

நின் = (இவ்வாறு) உனது,
என - அசை

(சுரிதகம்)

செல் நவை - செல்கையினால் உண்டாகின்ற குற்றமாகிய, அரவத்தும் - ஆரவாரத்திலும், இனையவள் - இத்தன்மையை அடையக்கூடியவள், நீ நீப்பின் - நீ விட்டுப் பிரிவாயானால், தன்நலம் கடைகொளப் படுதலின் - (இறந்து விடும் காலத்தாலே) தன்னுடைய நலம் முற்றிலும் கைக்கொள்ளப்படும் ஆதலால், முன்னிய தேஎத்து முயன்று செய்பொருள் - நீ கருதிய தேசத்திற்குச் சென்று முயன்று தேடும் பொருள், மற்று-உனக்கு இன்பந் தருதலே யன்றி, இவள் இன்னுயிர் தருதலும் ஆற்றுமோ - இவள் இனிய உயிரைத் தருதற்கும் வல்லதாகுமோ?

பொருள் இவள் இன்னுயிர் தருதலும் ஆற்றுமோ எனக் கூட்டுக.

பொதிகை நிகண்டு

(இரண்டாம் பகுதி)

[155-வது பக்கத் தொடர்ச்சி]

ககர வர்க்கம்

527 ககமே யம்பும் புள்ளு மாகும்.
528 ககனம் விண்ணும் படையுங் கற்பகமும்
காடும் புள்ளும் கிரியும் காகமும்.
529 கங்குதிப் பொறியுங் கருந்தினை பருந்தும்
வரம்பி னருகும் வழங்க லாகும்.
530 கச்ச மியானைக் கழுத்திடு கயிறும்
மரக்காலுந் துணிவும் வாரு மளவும்.
531 கசந்தான் நீரும் இரும்புந் தாதும்
கங்கமு மெனவே கழற லாகும்.
532 கச்சை கவசமுங் கயிறுந் தழும்பும்.
533 கச்சு மீனு முலைக்கச்சு மங்கியும்.
534 கசடு குற்றமு மையமு மாசும்.
535 கஞ்சம் வெண்கலமுங் கஞ்சாவுந் தாளமும்
வனசமும் வட்டு மப்பமு மாகும்.
536 கஞறல் பொலிவுங் குன்றலு மாகும்.
537 கஞ்சன் குறளனும் வேதனு மாகும்.
538 கஞ்சிகை கூறையுந் திரையு மாகும்.
539 கஞ்சனங் கண்ணாடியும் வலியானு மாகும்.
540 கடலே [1]கடலும் பசுவு மாகும்.
541 கடறே வழியுங் காடு மாகும்.
542 கடை சோர்வு மிடமும் வாயிலு முடிவும்
கீழுங் கதவும் வீதியு மாகும்.
543 கடகம் யானைக் குழுவுங்கை வளையும்
பரிசையுஞ் சாரலு மாயுதமும் வட்டமும்
மதிலுநார்க் கடகமும் வீடுங் கங்கணமும்.
544 கடுமுள்ளும் விடமும் கசப்புங் கடுத்தலும்
கடுக்காய் மரமுங் கழற லாகும்.
545 கட்டுக் குறியுங் காவலுங் களவும்
கண்ணு மிகுதியும் பந்தமு மாகும்.
546 கட்டல் பந்தித்தலுங் கள்ளலுந் தடுத்தலும்
களைதலு மெனவே கழற லாகும்.
547 கடிவிம் மிதமுஞ் சிறப்பு மையமும்
காப்புங் கரிப்புங் கடித்தலும் நாற்றமும்
விளக்கமும் பேயும் காலமும் மணமும்
விரைவு மச்சமும் கூர்மையும் புணர்ச்சியும்
கண்ணிட முஞ்சிறு கொடியும் புதுமையும்
துவசமு மிகுதியுங் குடியும் வரைவும்.
548 கடங்கரிக் குழுவு முழவு நீதியும்
யானைக் கன்னமுங் கயிறு மதமும்
சுரமு முடலுங் கடனுங் குடமும்
கானும் மலைச்சாரலுங் கழற லாகும்.
549 கட்கம் வாகு மூலமும் வாளும்.
550 கட்டளை யுரையறி கருவியு மொப்பும்
நிறையறி கருவியு மியாற்றலும்
நிறைகல்லுந் துலாராசியு மிட்டிகையும்.
551 கடவுள் தேவு நன்மையு முனியும்.
552 கட்சி காடுங் கூடு மமளியும்
துயிலிட முமெனச் சொல்ல லாகும்.
553 கடுத்த லொப்பு மையமும் வேகமும்.
554 கடவை யேணியுங் குற்றமு மாகும்.
555 கடிப்பம் பூணுஞ் செப்புங் காதணியும்.
556 கட்டி கருப்பு வட்டுறு கட்டியும்
புண்ணு மகிழ்ச்சியும் புகல லாகும்.

(பிரதி) 1. கடனும்.

557 கடைப்பிடி தேற்றமும் மறவா மையுமாம்.
558 கடிகை நாழிகையுந் துண்டமுஞ் சமயமும்
கதவின் றாழும் வேதமு மாகும்.
559 கணியோர் சாதியும் மருத நிலமும்
வேங்கையுங் கணித்தலும் விளம்ப லாகும்.
560 கண்டம் வாளும் யானைக் கச்சையும்
திரையும் மிடறுந் துண்டமும் வெல்லமும்
பூமியுந் தேசமுங் கவசமு மாகும்.
561 கணிச்சி யுளிக்கருவியுந் தோட்டியு மழுவும்.
562 கண்டிகை பணிச்செப்பு வாகு வலையமும்
பதக்கமுங் கண்டிகையும் பறையு மாகும்.
563 கண்ணருளும் விழியு மிடமுங் கணுவும்
வேயும் ஞானமுங் கருத்து மிடமும்.
564 கண்டேதி தினையுங் காஞ்சொறியு மாகும்.
565 கணை பூரநாளும் அம்புந் திரட்சியும்.
566 கண்ணுத லீசனுங் கருதலு மாகும்.
567 கணங்கால நுட்பமுந் திரட்சியும் பேயும்
வட்டமு நோயு முடிவு மவையும்
அற்பமு மெனவே யறைய லாகும்.
568 கணையங் காவற் காடும் பொன்னும்
யானைத் தறியு மெழுவு மாகும்.
569 கண்டகம் வாளு முள்ளுங் காடும்
[2]சுரிகையும் வேலுங் கூர்மையுங் கடினமும்.
570 கண்டல் கைதையும் ஒள்வாளும் வயிரமும்
முள்ளும் நீர்முள்ளியு மொழிய லாகும்.
571 கண்ணி கண்ணியுங் கட்டுங் கயிறும்
தாரும் முகிழமுஞ் சாற்ற லாகும்.
572 கணக்குப் பாவிகற்பமு மெண்ணு மாகும்.
573 கதலி துவசமும் வாழையுந் தேறும்
காற்றா டியுமெனக் கழற லாகும்.
574 கதழ்வு வேகமுஞ் சிறப்பு மாகும்.
575 கதிபஞ்ச கதியு மோட்சமு மாகும்.
576 கதுப்பு விலங்கின் கூட்டமுங் கவுளும்
ஆண்பெண் மயிரு மஞ்சளு மாகும்.
577 கதம்பங் கடம்பும் பலபூவு மாகும்.
578 கதிரிரு சுடருங் கதிரு மாகும்.
579 கதவங் காத்தலுங் காவலுங் கதவும்.
580 கதை காரணமுஞ் சொல்லுந் தடியும்.
581 கத்திகை வாசமுந் தொடையின் விகற்பமும்
துவசமு மெனவே சொல்ல லாகும்.
582 கதவு காவலுங் கபாடமு மாகும்.
583 கந்தரம் மேகமும் கழுத்துமலை முழைஞ்சும்.
584 கந்துகங் குதிரையும் பந்துங் கந்துகமும்.
585 கந்திருவங் குதிரையுந் தந்திரு மிசையும்.
586 கந்தம் பஞ்ச கந்தமுங் கிழங்கும்
நாற்றமும் பொன்னுங் கரணையும் வகுத்தலும்
கழுத்தடி யுமெனக் கழற லாகும்.
587 கந்து பண்டியு ளிரும்புங் கம்பமும்
யாக்கையின் மூட்டு மாதாரமுந் திரட்சியும்
காயமு மெனவே கழற லாகும்.
588 கந்த னருகனுங் கந்தனு மாகும்.
589 கப்பண மிரும்பிற்செய் நெருஞ்சி முள்ளும்
கைவே லுமெனக் கழற லாகும்.
590 கமலம் [3]செம்படாமு நீருந் தாமரையும்.

(பிரதி) 2. கரிகையும். 3. பெம்படாமு.

591 கம்பம் நடுக்கமுந் தூணு மாகும்.
592 கம்பலை துன்பமு மோசையு நடுக்கமும்
அச்சமும் வருத்தமு மாகு மென்ப.
593 கம்பு தவசமும் கோலுஞ் சங்கும்.
594 கம், புனலும் வெண்மையுந் தலையுங் ககனமும்
விதியும் புத்தியும் முகிலுஞ் செம்மையும்
காற்றுஞ் சுவர்க்கமுங் கழற லாகும்.
595 கம்மியர் கம்மாளருந் தொழில்புரி வோரும்.
596 கம்புள் சம்பங்கோழியுஞ் சங்கும்
வானம் பாடியு மெனவுரைத் தனரே.
597 கயம்தேய்வு நீரு நோயுங் குளமும்
மென்மையுங் களிறும் பெருமையுங் கீழும்
ஆழமு மெனவே யறைய லாகும்.
598 கயினி அத்த நாளுங் கைம்மையும்.
599 கயில்பூண் கொக்கியும் பிடரியு மாகும்.
600 கயவு பெருமையு மேன்மையு மாகும்.
601 கரணம் அந்தக் கரணமுங் கூத்தும்
காரணமுங் கணிதமும் வாயுங் கல்வியும்.

யாப்பிலக்கணம்

[135-வது பக்கத் தொடர்ச்சி]

செய்யுள்

முன்னர் வெளிவந்த இதழ்களில் செய்யுட்களுக்கு உறுப்புகளா யமைந்தவற்றைப் பற்றிக் கற்றோம்; இனி அவ்வுறுப்புகளைப் பெற்று நடைபெறும் செய்யுட்களைப் பற்றிக் கற்போம்:

"பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக உணர்வினில்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்"

என்றார் நன்னூலாசிரியராகிய **பவணந்தி முனிவர்**. அதாவது, தோல், இரத்தம், இறைச்சி, மேதை (நரம்பு), எலும்பு, மச்சை (மூளை), சுவேதநீர் என்னும் எழுவகைத் தாதுக்களினாலும் உயிர்க்கு இடனாக இயற்றப்பட்ட உடம்புபோல, இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நால்வகைச் சொற்களால் பொருளுக்கு இடனாகக் கல்வியறிவினால் செய்யுள் இயற்றவல்லோர் அலங்காரம் பெற இயற்றுவன செய்யுளாம். இங்குப் பொருள் என்று கூறப்பட்டவை அகப்பொருள் புறப்பொருள் என்னும் இருவகைப் பொருளாம். இப்படிக் கூறிய தனால், எழுத்து, சொல், பொருள், அணி என்னும் நான்கினும் நடப்பது யாப்பு என்பது ஆயிற்று.

இங்ஙனம் உணர்வினில் வல்ல பெருமக்களால் இயற்றப்படும் செய்யுள் இருவகைப்படும். அவை **பா** எனவும், **பாவினம்** எனவும் வழங்கப்படும். அவற்றுள் **பா** என்பது, **வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா** என ஐந்து வகைப்படும். மருட்பா ஒழிந்த மற்ற நான்கு பாக்களுக்கும் தனித்தனி மும்மூன்று இனங்கள் வழங்கும். அவ்வினங்கள் **தாழிசை, துறை, விருத்தம்** என வழங்கப்படும். ஆகவே, ஐவகைப் பாவும், பன்னிரண்டு பாவினமும் ஆகச் செய்யுள்வகை பதினேழென்பர். அவையாவன: 1. வெண்பா, 2. வெண்டாழிசை, 3. வெண்டுறை, 4. வெளி விருத்தம், 5. ஆசிரியப்பா, 6. ஆசிரியத் தாழிசை, 7. ஆசிரியத் துறை, 8. ஆசிரிய விருத்தம், 9. கலிப்பா, 10. கலித் தாழிசை, 11. கலித்துறை, 12. கலி விருத்தம், 13. வஞ்சிப்பா, 14. வஞ்சித் தாழிசை, 15. வஞ்சித் துறை, 16. வஞ்சி விருத்தம், 17. மருட்பா என்பனவாம்.

1, வெண்பா

வெண்பா என்பது ஐவகைப் பாவில் சிறந்த பாவென வழங்கப்படும். இதில் மூவசைச் சீர்களாகிய காய்ச்சீர்கள் நான்கும், ஈரசைச்சீர்களாகிய மாச்சீர் இரண்டும் விளச்சீர் இரண்டுமாகிய நான்கும் வரும்; தளைகளுள் இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை என்னும் இரு வகையான தளைகளே வரும்; அடிகளுள் நாற்சீரடியாகிய அளவடியும், முச்சீரடியாகிய சிந்தடியும் வரும்; அங்ஙனம் அடி அமையும்போது சிந்தடி எப்போதும் ஈற்றடியாகவே அமையும்; நால்வகைப்பட்ட ஓசைகளுள் செப்பலோசையே வரும். ஈற்றடியின் ஈற்றுச் சீர் **நாள், மலர்** என்னும் வாய்பாடமைந்த ஓரசைச் சீர்களுள் ஒன்றாகவேனும், குற்றியலுகரம் பெற்ற **காசு, பிறப்பு** என்னும் வாய்பாடமைந்த ஈரசைச்சீர்களுள் ஒன்றாகவேனும் அமையும். ஈற்றிலமையும் ஈரசைச்சீர் முற்றியலுகரம் பெறினும், **காசு, பிறப்பு** என்னும் வாய்பாட்டிலேயே அமைத்து வழங்கப்படும்.

வெண்பா என்பது **குறள்** வெண்பா, **சிந்தியல்** வெண்பா, **இன்னிசை** வெண்பா, **நேரிசை** வெண்பா, **சவலை** வெண்பா, **பஃறொடை** வெண்பா என அறு வகைப்படும். அவை பின் வருமாறு அமையும்:

1. **குறள் வெண்பா**:—முதலடி அளவடியாகவும் இரண்டாமடி சிந்தடியாகவும் கொண்டு, ஒரு விகற்பத்தாலும் இரு விகற்பத்தாலும் வருவது குறள் வெண்பா எனப்படும். அடிதோறும் எதுகை பொருந்தி வருவதை ஒரு விகற்பம் எனவும், எதுகை மாறி வருவதை இரு விகற்பம் எனவும் வழங்குவர்.

குறள் வெண்பா

"உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்."

இஃது ஒரு விகற்பத்தால் வந்த குறள் வெண்பா.

"உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்
தேர்க் கச்சாணி அன்னார் உடைத்து."

இஃது இருவிகற்பத்தால் வந்த குறள் வெண்பா.

2. **சிந்தியல் வெண்பா**:—முதலடியும் இரண்டாமடியும் அளவடியாகவும், மூன்றாமடி சிந்தடியாகவும் கொண்டு மூன்றேயடிகளால் அமைவது சிந்தியல் வெண்பா எனப்படும். இச்சிந்தியல் வெண்பா **இன்னிசைச் சிந்தியல் வெண்பா** என்றும், **நேரிசைச் சிந்தியல் வெண்பா** என்றும் இரு வகைப்படும். இன்னிசை வெண்பாவைப் போலத் தனிச்சொல் இன்றி ஒரு விகற்பத்தாலும் பல விகற்பத்தாலும் வருவது இன்னிசைச் சிந்தியல் வெண்பாவாம். நேரிசை வெண்பாவைப்போல இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பொருந்த ஒரு விகற்பத்தாலும்

இரு விகற்பத்தாலும் வருவது நேரிசைச் சிந்தியல் வெண்பாவாம்.

இன்னிசைச் சிந்தியல் வெண்பா

"நறுநீல நெய்தலும் கொட்டியுந் தீண்டப்
பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி
பறநாட்டுப் பெண்டிர் அடி.

இது தனிச்சொல் இன்றி ஒரு விகற்பத்தால் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

"சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை."

"முல்லை முறுவலித்துக் காட்டின மெல்லவே
சேயிதழ்க் காந்தள் துடுப்பீன்ற போயினார்
திண்டேர் வரவுரைக்கும் கார்."

இவை மூன்றடியாய் இன்னிசை வெண்பாவைப் போலத் தனிச்சொல் இன்றிப் பல விகற்பத்தால் வந்தன.

நேரிசைச் சிந்தியல் வெண்பா

"அறிந்தானை ஏத்தி அறிவாங் கறிந்து
சிறந்தார்க்குச் செவ்வன் உரைப்ப—சிறந்தார்
சிறந்தமை ஆராய்ந்து கொண்டு."

இஃது இரண்டாமடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று ஒரு விகற்பத்தால் வந்த நேரிசைச் சிந்தியல் வெண்பா.

"நற்கொற்ற வாயில் நறுங்குவளைத் தார்கொண்டு
சுற்றும்வண் டார்ப்பப் புடைத்தாளே—பொற்றேரான்
பாலைநல் வாயின் மகள்."

இஃது இரண்டாமடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று இரு விகற்பத்தால் வந்த நேரிசைச் சிந்தியல் வெண்பா.

கம்பராமாயணம்

189142

ஆரணிய காண்டம்—7. மாரீசன் வதைப் படலம்.

[152-வது பக்கத் தொடர்ச்சி]

கற்றவ னாயபின் கேட்கையுங் கடனே.

கறையுடைய நெஞ்சினர்க்கு யாவும் விடமுடைய மாசுணங்களேயாய் முடியுமாதலின், பிள்ளை மதியமும் பொல்லாத தாகப்பெற்ற இராவணன் அதனைப்போக்கிக் கன்னக்கனியும் இருள்தன்னைக் காணக் கருதிக் கட்டளையிட்டவளவில்,

ஆண்டப் பிறைநீங் கலுமெய்திய தந்த காரந்
தீண்டற் கெளிதாய்ப் பலதேய்ப்பன தேய்க்க லாகி
வேண்டிற் கரபத் திரத்தீர்த்து விழுத்த லாகிக்
காண்டற் கினிதாய்ப் பலகந்து திரட்ட லாகி

[அவ்வாறே அப் பிறைச்சந்திரன் நீங்கியவுடன், அடர்ந்த இருளானது, கையால் தொட்டுப்பார்க்கக் கூடிய அவ்வளவு செறிந்ததாய், தன்மேல் பிற பொருள்களைத் தேய்த்துக்கொள்ளக்கூடியபடி கற்போலத் திணிந்ததாய், வேண்டுமானால் வாளினால் அறுத்துத் தள்ளக்கூடியதாய், காண்பதற்குஇனிய வேலைப்பாடுகள் அமைந்தபல தூண்களாகக் கடைசல்பிடித்து வைக்கக்கூடியதாய் வந்து சேர்ந்தது]

வந்த இருள் இராவணனுக்கு யாதாயிற்றோ அது பின்னர். முதலில் அவ்விருள், அருளிலா நெஞ்சினர் கீழ்மையைப் பழித்தற் கேற்றதோர் செவ்வியாய்க் கம்பருக்கு வாய்த்தது. ஆதலின் அவர் தமக்கே உரியவோர் எதிர்நிலை உவமத்தால்,

முருடீர்ந் துருட்டற் கெளிதென்பதென்
முற்று முற்றிப்
பொருடீங் கில்கேள் விச்சுடர்புக்கு
வழங்க லின்றிக்
குருடீங் கிதென்னக் குறிக்கொண்டுகண்
ணோட்டங் குன்றி
அருடீர்ந்த நெஞ்சிற் கரிதென்பதவ்
வந்த காரம்

[முன்னுரைத்தபடி யெல்லாம், கல்லாகவும் கட்டையாகவும் வெட்டி உருட்டுவதற்கு ஏற்றதாய் இருந்ததென்று சொல்வதிற் சிறப்பென்ன இருக்கின்றது—மிகவும் (கல்வியில்)முதிர்ந்து, தீங்கில்லாத விடயங்களின் கேள்வியாகிய ஒளி புகுந்து பயில்வது இல்லாமல், இது வோர் குருடுதானோ என்று கூப்பிடுவதற்கு ஏற்றதாய், கண்ணோட்ட மில்லாமல் அருள்நீங்கிய மனதைப்போல அவ்விருள் மிகக் கரியதாயிற்று.]

என விளம்பலுறுகின்றார். இருளிற் கெதிர் அருளினை இதன்முன் திருவள்ளுவர்,

அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த
வின்னா வுலகம் புகல்

எனச் சேர்த்துப் பாடியிருக்கின்றனர். அருள் சேர்ந்த நெஞ்சினை வள்ளுவர் உரைத்தாராயின், அருள் தீர்ந்த நெஞ்சினை உரைத்தார் இவர். சொற்றொடர்களின் ஒற்றுமையை நோக்குங்கால், வள்ளுவர் வாசகம் கம்பரது மனத்தின்கண் நிகழ்ந்தே இவ் வீற்றடி பிறக்கலாயிற் றென்று நினைத்தல் கூடும். அவ்வாறாயின் அரிய விடயங்கள் சில இவ் விருபெரும் கவிஞர் திறத்திலும் ஒப்புநோக்கக் கிடக்கின்றன.

கல்வி கேள்வி அவ்விரண்டினும், கல்லாதானைக் குருடனென்னலாம், கேள்வி யில்லாதானைச் செவிடன் என்னலாம். வள்ளுவர் இவ்வியற்கைக்கு இணங்கியே,

கண்ணுடைய ரென்பர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்

எனவும்,

கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி

எனவும் எடுத்தியம்பினார். ஆயினும் கம்பர், "கேள்வியில்லாதவன் குருடன்" எனச் சிறிது விளையாட்டாக இச் செய்யுளில் முடிக்க நினைத்தனர் போலும். இம்முடிவின் அமைதியையும் அருமையையும் அறிவதற்கு வள்ளுவர்தம் குறள்கள் வேறு ஒன்றிரண்டு இங்கு நினைவிற் கொள்ளல்வேண்டும்—

பண்ணென்னும் பாடற் கியைபின்றேற் கண்ணென்
ணுங் கண்ணோட்ட மில்லாத கண்

எனவும்,

உளபோன் முகத்தெவன் செய்யு மளவினாற்
கண்ணோட்ட மில்லாத கண்

எனவும்,

கண்ணிற் கணிகலங் கண்ணோட்ட மஃதின்றேற்
புண்ணென் றுணரப் படும்

எனவும் திருவள்ளுவர் விளம்பினாராதலின், கண்ணோட்டமில்லாதவர் "குருடிங் கிதென்னைக் குறிக் கொள்வதற்கு" இலக்காக நிற்கின்றனர். இனி, பொருள் தீங்கில் கேள்விபுக்கு வழங்கல் இன்மையால் மாந்தர்க்குக் கண்ணோட்டங் குன்றுகின்றதென் னுங் குறிப்பு இச்செய்யுளில் அடங்கியுளது. இவ்வாறு, இம்மூன்றையும் தொடர்த்துங்கால், கேள்வியில்லாதவன் கண்ணோட்டமில்லாதவன், மற்று, கண்ணோட்டமில்லாதவன் குருடன், என அமையுமாதலின், கேள்வியால் தோட்கப்படாத செவியுடையவொருவனைக் குருடனென்றே கூறவேண்டும், என முடிப்பார் மெய்யறிவும் சொற்றிறமும் செறிந்த நம் கம்பர்பெருமான்.

இம்முடிவின்கண் அமைந்துள்ள ஆசியம் ஒருபுறமிருக்க, அவ்வாசியத்தினகவையின் கரந்துள்ள பொருளினது அருமையோ உன்னியுன்னிப் பாராட்டத் தக்கது. கல்வி கேள்வி என்னும் இவ்விரண்டினுக்குமுள்ள தொடர்பின் சிறப்பைக் கம்பர் திருவள்ளுவர் ஆகிய இருவருங் கருதியிருக்கின்றனர். இவர்களில், திருவள்ளுவர் கல்வியின் சிறப்பை முதன்மைப்படுத்திப் பின்,

கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை

என்னுங் குறளில், கல்வி யிலனாயினும் இரண்டாந்தரமாக ஒருவன், கேள்வியேனும் உடையவன் ஆதல் வேண்டுமென உணர்த்துகின்றார். இதனால், கல்வி இல்லாவிடத்தும் ஒருவாறு கேள்வியே சாலும் என்னும் கருத்துத் தோன்றி நிற்கின்றது. கம்பர் இக்கருத்தினை ஏற்றுக் கொள்வதற்குச் சிறிது அயிர்க்கின்றார் போலும். கல்வியில்லாதவனினும் கேள்வியில்லாதவனைக் குருடனென்பார் கம்பர். இதனால் கேள்வியின் சிறப்பு உயர்கின்றது. மற்று, 'கற்றிலனாயினுங் கேட்க" என்றதனால், "கல்வியில்லாமற் போயினும் போகுக, கேள்வியே நன்மை தரும்" என்ற பொருளில் திருவள்ளுவரும், கல்வியினும் கேள்வியே மேன்மை யுடைத்து என்று சாற்றினர் எனக் கொண்டு, இக் கேள்வியின் மேன்மையைச் சார்ந்து இவ்விரு புலவர்களும் ஒக்க நினைக்கின்றனர் என்றெண்ணுதற்கு இடமுளதென மதித்தற் கில்லை. "முற்றும் முற்றி"ப் பிறகு பொருள் தீங்கில் கேள்விச்சுடர் புக வேண்டும் எனக்கம்பர் உரைத்திருப்பதை மறத்தலாகாது. காதிற்குரிய கேள்வியாம் ஒலியை கண்ணிற் புகுந்து வழங்கற்குரிய ஒளியோடு மயங்க உரைக்கின்ற மாயத்திற் காளாகாமல் பொருந்த நோக்குங்கால், 'முற்றும் முற்றி' என்பதிலிருந்து, கல்வியில் முழுதும்முதிர்ந்தும் கேள்வியா லுணர்வுபெறாதவன் அருள் நிரந்த நெஞ்சினன் ஆவான் எனக் கம்பர் முடித்தனர் என்று கொள்வதற் கியல்வதாகின்றது. எனின், கல்வியில்லாவிடத்தும் கேள்வி பயன்தரும் என்ற வள்ளுவர்க்கு மாறாகக் கம்பர், கல்வியிருப்பினும் கேள்வியில்லாதார் பயனொன்று மெய்தமாட்டார் எனச் சாதிக்கின்றனர். இப் பயன் யாதென்பதன் இலக்கணத்தை,

அன்பு மறனு முண்டாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது

என்னுந் திருவள்ளுவர் வாக்கினின்றே கொள்ளலாம். மற்று, இவ்வாறு கேள்வியின் சிறப்பை மேம்படுத்துகின்ற கம்பரால், கல்வியின் ஆற்றல் குறைக்கப்படுகின்றதோ என்னின், அவ்வாறுமன்று. 'பொருள் தீங்கில் கேள்வி இது' எனத் தேர்ந்து கேட்பதற்கும் கேட்டவற்றை மனத்தின்கண் நிறுத்திக்கொள்வதற்கும் முற்றும் முற்றிய கல்வி எத்துணை யின்றியமையாததென்பதை அறிந்ததாற்றான்,

சொல்லொக்குங் கடிய வேகச்
சுடுசரங் கரிய செம்மல்
அல்லொக்கு நிறத்தி னுண்மேல்
விடுதலும் வயிரக் குன்றக்
கல்லொக்கு நெஞ்சிற் றங்கா
தப்புறங் கழன்று கல்லாப்
புல்லோர்க்கு நல்லோர் சொன்ன
பொருளெனப் போயிற் றன்றே

என இரங்கக்கூடியவ ராயினர். ஆதலின், "கற்றிலனாயினுங் கேட்க" என்று வள்ளுவர் உரைக்கும் ஊக்கத்தை ஒருவாறு தணித்து, அருளிற் காதாரமாவது கேள்வியே எனக் கேள்வியையும் உயர்த்தி, இரண்டினையும் பயன்பெற இணைக்கும் துண்மையைக் கம்பர் காட்டுகின்றார். "அருட் செல்வம் செல்வத்துட் செல்வம்" என வோரிடத்தும், "செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்" என மற்றோரிடத்தும் வள்ளுவர் காட்டியுள வாய்மைகளை மனத்துட்கொண்டு, அருள்சேர்ந்த நெஞ்சின ராவதற்குப் பொருள் தீங்கில் கேள்வி இன்றியமையாத தாவதும், அக்கேள்வி தங்குவதற்கு முற்றும் முற்றிய கல்வி யின்றியமையாத தாவதும், இதனால், "இருட்டிற் கஞ்சாது நடமாடும் குருட்டுக்கண்" வாழ்க்கை தீர்வதும் ஆகிய அனைத்தையும் நம் புலமைசால் பெருமான் பிணைத்துக் காட்டினர். கல்வியிற் பெரிய கம்பரிடத்தே கேள்வியின் பெருமையைக் கேட்கவேண்டும்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :

பாதாமி லேகியம்	ரூ. 3-0-0
ரதிவல்லப லேகியம்	2-0-0
மஹா திராக்ஷாதி லேகியம்	2-0-0
குழந்தைகளுக்கு	
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை	0-4-0
பால சஞ்சீவினி	0-4-0
பால ஸுதா (டானிக்)	1-0-0

தைலங்கள் :

சந்தனாதி	6 அவுன்ஸ் ரூ.	1- 0 -0
அமிர்தாமலக	"	0-12-0
பிருங்காமலக	"	0-12-0
ஸ்திரீகளுக்கு		
ஸுதக டானிக்		2-0-0
கர்ப்பாசய டானிக்		2-0-0
ப்ரஸவ லேகியம்		1-8-0

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.

I.D.L. ச்யாவனப்ராசா I.D.L. பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை

"நஞ்சன்கூடு பல்பொடி"

சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. மெடிகேடட்-டப்பி

தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

I.D.L. ச்யாவனப்ராச — சிறந்த டானிக் — சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

முலிகைசோந்த சிற்றுமணக்கு — ...

ஜவரேக் — ஸோல் ... எவ்வித ஜ்வரங்களுக்கும்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

தமிழகராதி ஆதார நூற்றொகுதி
நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா 2-0-0

அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல் லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா 1-4-0

கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா 0-6-0

திருக்குறள்
மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக் குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துள்ளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணு 0-12-0

களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கணநூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களை யுடையது தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 3-0-0

நூற்பொருட் குறிப்பு.

1. இறையனுர் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிகஇன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 10-0-0

இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா 0-8-0

தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டைய நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L.,

விலை அணு 0-6-0

கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.

திராவிடப் பிரகாசிகை

இந்நூல் தமிழின் மாட்சியையும் அதன் இலக்கண இலக்கியங்களின் விவரங்களையும், தமிழின் தெய்வப் பழமை மரபியல், ஒழிபியல் இலக்கண மரபியல், இலக்கிய மரபியல், என்னும் ஐம்பெரும் பகுதிகளால் நன்கு விளக்குவது. சமீபகாலத்திற் றோன்றிய "தென்மொழி வரலாறு," "தமிழ் வரலாறு" முதலிய புது நூல்களுக்கு வழிகாட்டியாயுள்ளது. தமிழ்ப்பண்டிதர்களுக்கும், மாணவர்களுக்கும் நற்பயன் விளைக்கக் கூடியது. புத்தகசாலை, வாசக சாலைகளுக்கும் இன்றியமையாதது. இது, திருவாவடுதுறையாதீன மகாவித்துவானய் விளங்கிய யாழ்ப்பாணத்து வடகோவை-சபாபதி நாவலரவர்களால் இயற்றப்பட்டது. இதன் இரண்டாம் பதிப்பு அழகு பெற டெம்மி எட்டுப்பக்கங்கொண்ட ருசு பாரங்களாக நல்ல கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. இப்பதிப்பின் விசேஷங்கள்:—தமிழ் ஆங்கில முன்னுரை, நூலாசிரியர் சரித்திரம், மேற்கோள் விளக்கம், கடினசந்தி நீக்கம், அச்சுப் பிழையின்மை முதலியன. வேண்டுவோர் கீழ்க்குறித்த விலாசங்களுக்கு எழுதவும்:— விலை ரூ 3-8-0.

1 காரியதரிசி, மலைய சைவசித்தாந்த சங்கம், துவாலாலம்பூர்.

2 சோதிடவிலாச புத்தகசாலை, கோக்குவில் யாழ்ப்பாணம்.

3 சே. வே. ஜம்புலிங்கம் பிள்ளை, 20, காரணேசுரர்கோயில்தெரு, மயிலாப்பூர், சென்னை.

ANCIENT JAFFNA

MUDALIAR C. RASANAYAGAM c. c. s.

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European. Professor S. Krishnasamy Iyengar has given an appreciative foreword.

PRICE Rs. 5-8-0.

KALANILAYAM
Purasawalkam, Madras.

கலாநிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினால் வெட்கக்கேடு. கல்லாதவர்களை நல்லவர்கள் 3. நாணத்தால் கைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது; உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி. அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. கள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஸாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

களவியற் காரிகை:—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. **7 8 0**

காலிகோ கில்ட் பைண்ட் ரூ. **8 8 0** ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. **9 0 0**

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

வர்த்தமானம்

காங்கிரஸ் மகாநாடு:—சென்ற இரண்டு ஆண்டுகளாகக் காங்கிரஸ் மகாநாடு கூட்டம் கூடாமலிருந்தது. பொதுஜனங்கள் சட்டமறுப்பு இயக்கத்தில் மனதைச் செலுத்தியிருந்தமையாலும், அரசாங்கத்தார் காங்கிரஸ் சட்ட விரோதமான கூட்டம் என்று தடுத்திருந்தமையாலும் காங்கிரஸ் கூடுவதற்கியலாது போயிற்று. ஸ்ரீ மாளவியாவின் பெரு முயற்சியால் மார்ச்சு மாதத்தில் காங்கிரஸைக் கூட்டுவதென்று ஜனத்தலைவர்களால்தீர்மானிக்கப்பெற்றிருக்கின்றது. அதன்படி மார்ச்சு மாதம் 31-ந் தேதி யன்று காங்கிரஸ் மகாநாடு கல்கத்தாவில் கூடலாம் என்று தெரிகின்றது.

***

சென்னை மாகாண வரவுசெலவுத் திட்டம்:—1932-33-வது வருட, சென்னைமகாண அரசாங்கத்தின் திருத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டம் வருமாறு:—1932-33 வருட வருமானம் 1688 லட்சம். 1932-33 இல் எதிர்பார்க்கப்பட்டதைவிட 95 லட்சம் அதிகப்படி வருமானம் கிடைத்திருக்கின்றது. 1932-33-வது செலவுதிட்டப்படி 1627 லட்சம் தேவை. எனவே திட்டப்படி எஞ்சுகின்ற தொகை 32 லட்சம் அதிகமாகும். அலவன்ஸ் முதலிய செலவிற்காக 19 லட்சமும் ஹைட்ரோ எலக்டிரிக் திட்டத்தில் 3 லட்சம் அதிகமும், கல்விக்கு 3 லட்சம் அதிகமும் பணம் வேண்டியிருக்கின்றது. இவ்வழிச் செலவுபோக மிகுதியாயுள்ளது 63 லட்சமாகும். 1933-34 இல் 1920 லட்சம்தான் வருமானம் எதிர்பார்க்கப்படுகின்றது.

***

பம்பாயின் முன்னேற்றம்:—இந்தியாவிலுள்ள நகரங்களில் சிறந்ததும், பல துறைகளில் முன்னேற்றமடைந்துள்ளதுமான பம்பாய் நகரில் நான்கு முஸ்லீம்கள் மிகவும் துணிகரமாகக் கொள்ளையடித்தனர். பைகுல்லா என்னுமிடத்திற் கருகில் ஒரு வீதியில், காலை நேரத்தில் ஒரு மார்வாரி, தமது ஆளுடன் சென்றுகொண்டிருக்கையில், 4 முஸ்லீம்கள் அவ்விருவர் எதிரில் தோன்றி கண்களில் மிளகாய்ப் பொடியைத் தூவி இருவரையும் கத்தியால் குத்திவிட்டு மார்வாரியின் வசமிருந்த 400 ரூபாய் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றனராம். போலீசார் இருவரைக் கைதுசெய்துள்ளார் என்று தெரிகின்றது.

***

சீன ஜப்பான் யுத்தம்:—சீன ஜப்பான் யுத்தம் நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றது. சிறிது காலமாக மஞ்சூரியாவில் சீனப்படையும் ஜப்பான் படையும் கடுமையாகப் போர் செய்துவருகின்றன. சர்வதேசச் சங்கத்தார் இவ்விருநாட்டாருக்குள்ளும் ஒரு மத்தியஸ்தமான ஏற்பாட்டைச்செய்ய முயன்ற முயற்சி பலன் தரவில்லை. ஜப்பானிய அரசாங்கத்தாரும் சர்வதேச சங்கத்திலிருந்து விலகிக்கொள்ளத் தீர்மானித்திருக்கின்றனர் என்று தெரிகின்றது.

***

அமெரிக்க பார்லிமேண்டு சபையினர்:—அமெரிக்க பார்லிமெண்டு சபையினருக்குரிய வசதிகள் வருவாறு.

அவர்கள் வருடமொன்றிற்கு 2000 பவுன் சம்பளம் கொடுக்கப்படுகின்றனர்.

அவர்களுக்குக் காரியதரிசிகளும் குமாஸ்தாக்களும் சர்க்கார் செலவில் தரப்படுகின்றனர்.

காகிதம், பேனா, பேப்பர் முதலியவைகள் இனாமாகக் கொடுக்கப்படுவதுடன் சபைக்குவந்துபோகும் செலவையும் சர்க்கார் ஏற்றுக்கொள்கின்றது.

இலவசமாக மருந்து கொடுக்கப்படுகிறது. அவர்களுடைய மோட்டார் வண்டிகள் தங்குவதற்கு ஷெட்டுகள் கொடுக்கப்படுகின்றனவாம்.

அவர்கள் இறந்தால் சர்க்கார் செலவில் ஆடம்பரமாக அடக்கம்செய்ய ஏற்படும் செலவை அரசாங்கம் ஏற்றுக்கொள்கின்றதாம்.

***

ஓர் ஆங்கிலச் சிறுவன்:-இங்கிலாந்தில் 12 வயதுடைய ஓர் சிறுவனிருக்கின்றானாம். அவன் சங்கீதத்தில் அளவிறந்த சக்தியுடையவனாம். ஐரோப்பாவில் அச்சிறுவனுக்கு இணையான சங்கீத வித்வான் எவனும் இதுவரையில் தோன்றியதில்லையாம். அவன் பாடினால் கேட்பவர் ஸ்தம்பித்துவிடுகின்றனராம்.

***

தமிழ்க்கடல்:—திருவாளர். கா. நமச்சிவாயமுதலியாரால் பதிப்பிக்கப் பெறுகின்ற தமிழ்க்கடல் என்னும் ஒரு மாதப்பத்திரிகை வரப்பெற்றோம். தமிழ் மக்களின் அறிவுவளர்ச்சியோடு தமிழ் வளர்ச்சிக்குமான முறையில் இம்மாத விதழ் வெளிவரும் என்றும், இதனில் பூமிசாஸ்திரம், வானசாஸ்திரம், தாவரசாஸ்திரம், ரசாயனசாஸ்திரம் முதலியவைகள் எல்லோரும் எளிதில் அறிந்து பயன்பெறும்படியான முறையில் எழுதி வெளியிடப்படும் என்றும் பத்திரிகையில் கூறப்பட்டுளது. ஆகாயவிமானம், எலக்டிரிஸிட்டி, கம்பியில்லாத் தந்தி முதலிய விஷயங்களும் இதனில் விளக்கப்படும் என்று தெரிகின்றது. இதன் வருடசந்தா ரூ. 2. தமிழ்க்கடல் ஆபீஸ், சாந்தோம், மைலாப்பூர் சென்னை, என்ற விலாசத்தில் இது கிடைக்கும்.

***

பூரி சங்கராச்சாரியார்:— ஒரு வாரமாய்ச் சென்னையில் பல விடங்களில் பிரசங்கம் செய்துவரும் பூரி சங்கராச்சாரிய ஸ்வாமிகள், உலகத்தில் வழங்கும் பாஷைகளின் தன்மையைப் பற்றிச் சில வார்த்தைகள் கூறியருளினார். அது வருமாறு:—"உலகத்தில் வழங்கும் பாஷைகளை உத்தமம் மத்திமம் அதமம் என்று மூவகையாகப் பிரிக்கலாம். அவைகளில் ஆங்கில பாஷை அதமபாஷை. ஆங்கில பாஷையில் எழுத்துக்களுக்கும் சொற்களுக்கும் பொருளுக்கும் சம்பந்தம் கிடையாது. சமிஸ்கிருதம் உத்தமபாஷை. வடமொழியில் ஒவ்வோர் சொல்லிற்கும் சூக்ஷமப் பொருளும் ஸ்தூலப் பொருளும் உண்டு. எழுத்து என்னும் பொருளைத்தருகின்ற அக்ஷரம் என்னும் வடமொழிச்சொல் அழியாதது என்னும் பொருளையுடையது."

இறுதியில், சமிஸ்கிருத பாஷையின் உயர்வினிற்கு உதாரணங்கள் பலகாட்டி, அப்பாஷையின் அமைப்பும் தத்துவமும் சிறப்புடையதென்றும், ஆகையினாலேதான் அது தேவபாஷையெனக் கொண்டாடப் பெறுகின்றதென்றும் கூறினார்.

***

யாழ்ப்பாணத்தில் கலாநிலயம் என்னும் பெயரால் நிறுவப்பெற்றிருக்கின்ற சங்கத்தின் முதலாண்டு அறிக்கை வரப்பெற்றோம். இச்சங்கம் தமிழ்க்கலைகளாகிய ஓவியம், சிற்பம், மொழி, இசை ஞானம் முதலியதுறைகளில் தொண்டாற்றும்நோக்கத்துடன் சென்றவாண்டு நிறுவப்பெற்றது. கடந்தவருடம், திருக்கோவை, பத்துப்பாட்டு, கம்பராமயணம், கலித்தொகை, சிந்தாமணி, தேவாரம், சைவசிந்தாந்தம் முதலிய விடயங்கள்பற்றிப் பல அறிஞர் உபந்நியசித்துள்ளார். இலக்கிய இலக்கண வகுப்புக்களும் இச்சங்கத்தின் சார்பில் நடத்தப்பெறுகின்றன. இச்சங்கத் தலைவர் யாழ்ப்பாணம் பரமேஸ்வரி கல்லூரித் தலைவரான ஸ்ரீமான் S. நடேச பிள்ளை. மத்திய கல்லூரி ஆசிரியரான ஸ்ரீமான் K. நவரத்தனம் காரிய தரிசி. அறிக்கையிலிருந்து இச்சங்கம் சிறந்த நோக்கத்துடன் நடத்தப்பெறுகின்றதென்று தெரிகின்றது.

KALANILAYAM
Reg. No. M. 2324.

— கம்ப ராமாயணம் —

பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.
ஆகியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

பால காண்டம்	ரூ.	5	0	0
அயோத்தியா காண்டம்	,,	5	0	0
ஆரணிய காண்டம்	,,	4	0	0
கிட்கிந்தா காண்டம்	,,	4	8	0
சுந்தர காண்டம்	,,	5	0	0
யுத்த காண்டம்—2 பாகம்	,,	10	0	0

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— **கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.**

தேகபலம், ஞாபகசக்தி, உற்சாகம், ஊக்கம், சுக சம்பத்து இவைகளைக் கொடுப்பதில் எங்கள் பிரசித்திபெற்ற

ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

பலவிருத்தி ஒளஷதங்களுக்கெல்லாம் முன்னணியில் நிற்கின்றன. இலட்சக் கணக்கான ஜனங்கள் (சென்ற 53 வருஷங்களாக) உபயோகித்து குணமென்னும் பாக்கியத்தை அடைந்திருக்கிறார்கள். நீங்களும் ஒரு டப்பியை உபயோகித்துக் குணத்தை அறியுங்கள்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!

ஆதங்க நிக்ரஹ ஒளஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

கற்பக மலர் (சிறு கதைகள்)
(ஆசிரியர் - சகோதரி வி. பாலம்மாள்)
மலர் 1 - விருந்தில் விலங்கு - விலை அணு 3.
மலர் 2 - அவள் இஷ்டம் - விலை அணு 3.
ஏழணு ஸ்டாம்புக்கு 2-புத்தகங்கள் அனுப்பப்படும்.
ஸ்ரீமதீ பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை.

பாரத வசனம்.

ஆதிபர்வம் 3-8-0. ஸபா, ஆரண்ய, விராட பர்வங்கள் அடங்கியது ரூபா 5-0-0. உத்தியோக, பீஷ்ம, துரோண, கர்ண சல்லிய, ஸவுப்திக பர்வங்கள் அடங்கியது 5-0-0. சாந்தி, அநுசாசனிக, அச்வமேத, ஆச்ரமவாஸ, ஸ்வர்க்காரோஹண, முசல, மஹாப்ர ஸ்தானிக பர்வங்கள் அடங்கியது 5-0-0.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Policies Issued in 1931 for over	Rs. 1,32,33,000
Showing an increase over the New Business figure for 1930 of	16.54 %
Claims paid up to end of 1931 over	Rs. 90,00,000
Invested Funds amount to over	Rs. 1,75,00,000

LOW RATES LIBERAL CONDITIONS
NEW TABLES NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)